கொள்வதின்மூலம் நீதிமானாக்கப்படுவான் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எபே 2:4-5, 1 யோ 4:10, கொலே 2:13, ரோம 10:4, எபி 10:14.

6. இர்வங்கைட்ஸ்கள், ஆர்மேனியன்கள், யூனிட்டேரியன்கள், புதிய எருசலேம் சபை, ஈஸ்ட்டரன் ர்தோடக்ஸ் சபை, ஏழாம் நாளை ஆசரிப்போர், மென்னோனைட், மோர்மோன்கள், காம்பெலைட்ஸ்கள், சுதந்திர புராட்டஸ்டென்ட்கள், முதலானவர்கள் சொல்லுகிறபடி மனுஷன் உண்மையாகவே விசுவாசத்தின்மூலம் நீதிமானாக்கப்பட்டாலும் அந்த விசுவாசத்தின்மூலம் கிறிஸ்துவின் ஆதிக்கத்தின்மீது விசுவாசம் வைக்காமல் அவருடைய வாக்ய விஷயத்தை ஒப்புக் கொள்வதன் மூலம் மாத்திரமே நீதிமானாக்கப்படுவான் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். பிலிப் 3:9, அப் 10:43, எபேசி 2:8-9, ரோ 4:16.

## 14 பச்சதாபத்தை பற்றின (தான் செய்த பாவத்தின் நிமித்தம் வருத்தம்) உபதேசம்

## DOCTRINE OF REPENTENCE

அ) தான் செய்த பாவத்தின் நிமித்தம் வருத்தம் என்பது ஒரு பாவி நியாயப் பிரமாண வாக்ய ஞானம் மூலமாக தன்னுடைய பாவத்தை கிரகித்து அவற்றின் விஷயத்திற்காக வருத்தப்பட்டு, பச்சதாபப்பட்டு இயேசு கிறிஸ்துவின் மூலமாக விசுவாசத்தின் மூலம் அவனுக்குள் தேவனுக்காக உண்டாகிற உண்மையான மாற்றம் என்று விசுவாசிக்கிறோம். லூக் 18:13.

ஆ) ஆகவே மனஸ்தாபத்தில், வருத்தத்தில் இரண்டு பாகங்கள் உள்ளது. அவை என்னவென்றால் நொருங்குண்ட உடைந்த இருதயம், விசுவாசம் - சங். 51:17. அப் 16:30-31.

இ) நொருங்குண்ட, உடைந்த இருதயம் என்றால் தன்னுடைய பாவத்திற்காக தேவ வார்த்தையினால் எச்சரிக்கப்பட்டு, அவைகளின் நிமித்தம் பெற்றுக் கொள்ளக் கூடிய தேவனுடைய கடுங்கோபம் மற்றும் உண்மையான தண்டனையை தெரிந்து கொண்டு அந்த விஷயத்திற்கு பயந்து நடுங்குதல். சங். 51:17, அப். 16:30-31.

ஈ) இந்த விஷயங்களுக்கு விசுவாசம் என்பது சுவிஷேசத்தின்மூலம் நித்ய ஜீவன் பெறுவதற்காக தேவனுடைய கிருபை மற்றும் இரக்கத்தினால் மற்றும் பரிசுத்த ஆவி தேவனுடைய சக்தியினால் ஆத்துமத்தில் உண்டாகிற பெரிய காரியம் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். 2 தீமோ 1:12, 1 கொரி 12:3.

## <u>வேதாகமத்தின் அடிப்படையில் கீழ்கண்ட உபதேசங்கள் அனைத்தையும் நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.</u>

1. ரோமன் கத்தோலிக்கச் சபை, ஈஸ்டரன் ஆர்தோடெக்ஸ் சபை முதலானவர்கள் சொல்லுகிறபடி மனஸ்தாபம், அல்லது வருத்தம் என்பது ஞானஸ்ஞானத்திற்குப் பிறகு நடக்கிற பாவத்தினுடைய பாவ மன்னிப்பின் நிமித்தமாக நடக்கிற புதிய உடன்படிக்கையின் திரவியம் என்கிற அந்த விஷயத்திற்கு நொருங்குண்ட, நருங்குண்ட இருதயம் உடையவர்களாய் போதகரிடத்தில் பாவத்தை ஒப்புக் கொண்டு அறிக்கையிட்டு நல்ல காரியத்தைச் செய்து அந்த பாவத்திலிருந்து பரிசுத்தமாகுதல் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். அப் 19:4, வெளி 2:5, ஏசய் 54:10, ஒசியா 14:2, லூக்கா 24:45-47, எபி 11:6, எரேமி 31:19.

2. மெதடிஸ்டுகள், இவான்ஜிலிக்கல் காங்கிரிகேஸனல் சபையினர்,

மோரோவியன்கள், சால்வேஷன் ஆர்மி, சுதந்திரபாப்டிஸ்டுகள் முதலானவர்கள் சொல்லுகிறபடி விசுவாசம் என்பது வருத்தத்தத்தில் அல்லது பச்சதாபத்தின் பாகமேயில்லை என்ற போதனையை நாங்கள் நிராகரிக்கிறோம். மத் 3:2, 5:6, யோ 3:16.

3. ரோமன் கத்தோலிக்கச் சபை, யூனிவர்ஸலிஸ்டுகள், புதிய எருசலேம் சபை, ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ் சபை, ஏழாம் நாளை ஆசிரிப்போர், மென்னோனைட்கள் முதலானவர்கள் சொல்லுகிறபடி பாவப் பிராயசித்தத்தில் மற்றும் இருதயம் புதிதாய் மாற்றப்படுவதில் உண்டானால் பச்சதாபம் என்கிறதை நாம் நிராகரிக்கிறோம். சங். 6:3-4, ரோ 4:6, 1 இரா 8:47, எசே 14:6, லூக் 17:4, அப் 26:20.

## 15 பரிசுத்தமாகுதல் மற்றும் நற்கிரியைகளைக் குறித்த உபதேசம்

## DOCTRINE OF SANCTIFICATION AND GOOD WORK

அ) நற்கிரியைகள் என்பது புதிய ஜென்ம சுபாவத்தினுடைய பலனாக பரிசுத்த ஆவியின் வல்லமையினால் மற்றும் மெய்யான விசுவாசத்திற்கு அடையாளமாக நிறைவேற்றப்படும். தேவனுடைய கட்டளைகளை முழுமையாக நிறைவேற்றுவதற்கு அதன் மூலம் தேவனை மகிமைப்படுத்துவதற்கு மறுரூபமாகி அவைகளின்மூலம் நம்மை இரட்சிப்புக்கு நேராய் நடப்பித்து தேவனுக்கு நன்றி தெரிவிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட காரியம் என்று நாம் விசுவாசிக்கிறோம். மத் 15:9, யோவா 15:5, 1 கொரி 10:31, கொலோ 3:7.

ஆ) இந்த ஜீவியத்தில் பரிசுத்தமாகுதல் என்பது முழுமையானதால் மற்றும்

அதனால் நாம் செய்கின்ற நற்கிரியைகள்கூட முழுமையடையாமலிருப்பதின் காரணத்தினால் இந்த பரிசுத்த ஜீவியம் சரீர காரணத்தினால் களங்கம் உடையதாயிருக்கிறது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ரோம 7:21-24, கலாத் 5:17.

இ) இந்த ஜீவியத்தில் நாம் நற்கிரியைகள் செய்ய வேண்டியிருக்கிறதாயினும் அவைகளின்மூலம் பாவத்திலிருந்து விடுதலை, மற்றும் நித்ய ஜீவனையாகிலும் நாம் பெற்று கொள்ள முடியாது. ஆனால் தேவன் நமக்குக் கொடுத்த இந்த ஈவுகளுக்காக விசுவாசத்தின்மூலம் நன்றி தெரிவிப்பதற்காக நாம் இவைகளை செய்ய வேண்டும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். மத் 5:16, எபே 2:8, எபே 2:10, யாக் 2:17-18.

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத கீழ்கண்ட உபதேசங்களை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1. ரோமன் கத்தோலிக்கச் சபை, சால்வேஷன் ஆர்மீ ஆர்மேனியன்கள், மெதடிஸ்டுகள், இவான்ஜிலிக்கல் யுனைடெட் பிரதரன்கள், இவான்ஜிலிக்கல் காங்கிரிகேஷனல், யூனிட்டேரியன்கள், மோர்மோன்கள், சேக்கர்கள், ஹோலினெஸ் சபைகள், முதலானவர்கள் சொல்லுகிறபடி முழுமையான பரிசுத்தம் மற்றும் முழுமையான நற்கிரியைகள் இந்த ஜீவியத்திலேயே முடிகிற காரியம் அல்ல என்ற அவர்களுடைய உபதேசத்தை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். பிலிப் 3:12, 1 தெச 4:1, 2 கொரி 4:16, எபேசி 4:15, யாக் 3:2, எரேமி 17:9, ரோ 8:7.

2. ஆர்மேனியன்கள், யூனிட்டேரியன்கள், காம்பெல்லர்கள், புதிய எருசலேம்

சபை, கியூக்கர்கள், முதலானவர்கள் சொல்லுகிறபடி மறுரூபமடையாதவர்கள்கூட நற்கிரியைகள் செய்வார்கள் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எபேசி 2:10, ரோ. 14:23, மத் 7:16, யோ 15:5.

3. ரோமன் கத்தோலிக்கச் சபை, ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ் சபை, சொல்லுகிறபடி தேவனுடைய பிரத்யேகமான கட்டளையில்லாமலே, சபைகளினுடைய கட்டளைகளின்மூலம் நற்கிரியைகளின் காரியத்தை நாம் செய்ய முடியும் என்ற வேதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். கொலே 2:16, 1 தீமோ 4:1-5.

4. ரோமன் கத்தோலிக்கச் சபை சொல்லுகிறபடி மற்றவர்களுடைய நன்மைக்காக கடமைக்கு மேற்பட்ட வேலைகளைக்கூட நீதியுடைய மனுஷன் செய்யலாம் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ஏசய் 64:6, லூக் 17:10, சங் 49:7-8.

5. கியூக்கர்கள் சொல்லுகிறபடி கிறிஸ்தவர்கள் செய்கின்ற நல்ல வேலைகள் பரிபூர்ணமான மற்றும் பரிசுத்தமானவைகள் என்பதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எபி 12:1, ரோ 7:8, 23, கலாத் 5:17, ஏச 64:6.

6. ரோமன் கத்தோலிக்கச் சபை, மென்னோனைட்கள், காம் பேலைட்ஸ்கள், ஏழாம் நாளை ஆசிரிப்போர், கியூக்கர்கள், புதிய எருசலேம் சபை, மோர்மோன்கள், கிறிஸ்தவ இஸ்ரவேலர்கள், லாட்ஜரி, மாடர்னிஸ்டுகள், செக்டேரிய்ன சபை முதலானவர்கள் சொல்லுகிறபடி இரட்சிப்பை பெற்றுக் கொடுக்கிற நற்கிரியைகள் அவசியமாயிருக்கிறது என்பதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத். 5:16, எபேசி 2:9-10, யோ 3:16, ஆபகூப் 2:4, யோ 3:36.

## 16 ஜெபத்தைக் குறித்த உபதேசம்

## DOCTRINE OF PRAYER

அ) ஜெபம் என்பது அது ஒரு தெய்வீகமான சேவையாக நித்யமான நிஜ தேவனுக்கும், மனுஷர்களுக்கும் மத்தியஸ்தரன இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவரவர்களுடைய அவசரங்களை தெரிவிப்பதற்கும் மற்றும் அவர்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களுக்காக தேவனுக்கு நன்றியும், ஸ்தோத்திரமும் செலுத்துவதற்கு என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். சங் 10:17, 27:8, பிலி 4:6.

ஆ) கிறிஸ்தவர்கள் தங்களுக்காக மற்றும் மற்றவர்களுக்காக எவ்விதமான பாகுபாடும் இல்லாமல் ஜெபிப்பதே மாத்திரம் அல்லாமல் மற்றும் முக்கியமாக விசுவாசிகளுக்காக பிரத்தேயகமாக பிரார்த்தனை செய்ய வேண்டியிருக்கிறது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். 1 தீமோ 2:1-3.

இ) கிறிஸ்தவர்கள் மரித்தவர்களுக்காக அங்கலாய்த்து ஜெபிக்கக்கூடாதென்று நாங்கள் விசுவாசிக்கிறோம். எபி 9:27.

ஈ) அப்படியே கிறிஸ்தவராயிருக்கிறவர்கள் எப்பொழுதும் எல்லா இடங்களிலேயும் அவர்களுக்காக மற்றும் மனுஷர்கள் எல்லாருக்காகவும் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்து நம் அவசரங்களை தீர்த்துக் கொள்கிற முறைகளை, காலத்தை தேவனுடைய சித்தத்துக்கு ஒப்புக் கொடுத்து ஜெபிக்க வேண்டும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

**வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத கீழ்கண்ட உபதேசங்களை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.**

1. ரோமன் கத்தோலிக்கச் சபை, ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ் சபை, சொல்லுகிறபடி தேவதூதர்களுக்காக, மரித்த பரிசுத்தவான்களுக்காக மற்றும் கருணை மாதா என்ற மேரி மாதாவை சகாயத்திற்காக பிரார்த்தனை செய்து அவர்களுடைய படங்களுக்கு, மற்றும் பரிசுத்தவான்களை பூஜிப்பது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத் 4:10, சங் 65:2, வெளி 19:10, செய் 63:16, லூக் 11:2-4, செய் 45:22.

2. யூனிவர்ஸிலிஷ்டுகள், யூனிட்டேரியன்கள், மாடர்னிஸ்டுகள், கல்வானிஸ்டுகள், லாட்ஜ்ரிஸ்ட்கள், சொல்லுகிறபடி குமாரனாகிய கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆத்துமாவுக்காக அல்லாமல் கேவலம் பிதாவுக்கு மாத்திரமே ஜெபத்தை ஏரெடுக்க வேண்டும் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ஏசய் 48:16-17, சங் 2:12.

3. ஆவியை ஆராதிப்பவர்கள் சொல்லுகிறபடி மரித்துப்போனவர்களுடைய ஆத்துமாக்கள்கூட பிரார்த்தனை செய்யலாம் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். வெளி 19:10, ஏச 63:16.

4. ரோமன் கத்தோலிக்கச் சபை, ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ் சபை முதலானவர்கள் சொல்லுகிறபடி மரித்துப் போனவர்களுக்காக நாம் கண்டிப்பாக ஜெபிக்க வேண்டியிருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். உபா 4:2, 1 கொரி 3:8, எபி 9:27.

## 17 கிருபையின் எத்தனங்களைக் குறித்த உபதேசம்

## DOCTRINE OF THE MEANS OF GRACE

அ) கிறிஸ்துவின் மூலமாய் ஸ்தாபிக்கப்பட்ட கிருபையின் எத்தனங்களினால் அல்லாமல் மற்ற எவ்விதமான பாவ மன்னிப்பை, பரிசுத்த ஆவியின் வரங்கள், முதலான ஆவிக்குரிய ஆசீர்வாத வரங்களை தேவன் நமக்கு அங்கீகரித்துக் கொடுத்திருக்கிறார் என்று நாம் விசுவாசிக்கின்றோம். 1 கொரி 1:21, 1 கொரி 12:13.

ஆ) அந்த கிருபையின் எத்தனங்கள் சுவிஷேசம் மற்றும் சாக்கிரமெந்துக்களான ஞானஸ்ஞானம், திருவிருந்து என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். அப் 20:24, 32, ரோம 10:17, அப் 2:38, மத் 26:28.

இ) இந்த கிருபையின் எத்தனங்களில் சுவிஷேசம் அப் 20:24, ரோம 10:17 வின்மூலம், ஞானஸ்ஞானம் அப் 2:38, தீத் 3:5, திருவிருந்து லூக் 22:19-20, மத் 26:28 வின் மூலமும் விரிவாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

ஈ) இவ்வாறு தேவன்மூலம் ஸ்தாபிக்கப்பட்ட இந்த கிருபையின் எத்தனங்கள் என்றால் சுவிஷேசம் மற்றும் சாக்கிரமெந்துக்காளன ஞானஸ்ஞானம், திருவிருந்து இவைகளின்மூலம் உலகமெங்கும் சென்று சுவிஷேசத்தை அறிவித்து சாக்கிரமெந்துக்களை அனுசரிக்க வேண்டும் என்று சபைக்கு கிறிஸ்துவ சபைகளுக்கு கட்டளையை தேவன் கொடுத்தார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். மார் 16:15-16.

உ) இவ்வாறு இந்த கிருபையின் எத்தனங்களின் மூலம் அல்லாமல் மனுஷர்களின் மூலமாய் ஸ்தாபிக்கப்பட்ட இந்த சாதனங்களின் மூலம் சபைகளை கட்டுவதற்கு முயற்சி செய்வதென்பது கிறிஸ்துவுக்கு எதிரான

செயல் என்றும் அதன்மூலம் சபைக்கு எவ்வளவோ சங்கடங்கள் வருகின்றது என்றும் நாங்கள் விசுவாசிக்கிறோம். 1 கொரி 3:11, யோ 6:63.

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத இந்த கீழ்கண்ட உபதேசங்களை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1. ரோமன் கத்தோலிக்கச் சபை, ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ் சபையினர்கள் சொல்லுகிறபடி கிருபையின் எத்தனங்கள் ஏழு இருக்கிறது என்பதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத் 28:19, மத் 26:26-28.

2. பிரஸ்பைடிரியன்கள், கல்வானிஷ்டுகள் சபை, மென்னோனைட்ஸ்கள், பாப்டிஸ்டுகள், மெதடிஸ்டுகள், இவான்ஜிலிக்கல் ஒருங்கிணைந்த சகோதரர்கள், இவான்ஜிலிக்கல் காங்கிரிகேஷனல் சபை முதலானவர்கள் சொல்லுகிறபடி ஞானஸ்ஞானம் மற்றும் திருவிருந்து என்ற பரிசுத்த சாக்கிரமெந்துக்கள் தேவன் தம்முடைய கிருபையை, ஆவியை பொழிந்தருளின கிருபையின் எத்தனங்கள் இல்லை என்ற அவர்கள் போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மேற்சொன்ன வேதக் குறிப்பைப் பார்க்கவும்.

3. சால்வேஷன் ஆர்மி, பிரஸ்பைடிரியன்கள், கால்வானிஸ்டுகள் சபை, பாப்டிஸ்டுகள், மெதடிஸ்டுகள், முதலானவர்கள் சொல்லுகிறபடி தேவன் தம்முடைய மிக முக்கியமான ஆவிக்குரிய (அ) ஆத்மீக ஆசிர்வாதங்களை கிறிஸ்துவின் மூலம் மாத்திரமே வாங்கப்பட்ட மற்றும் ஸ்தாபிக்கப்பட்ட கிருபையின் எத்தனங்கள் மூலம் மட்டுமே இல்லாமல் வேறு வகையில் அந்த ஆத்மீக ஆசீர்வாதங்களை அதாவது கிருபையின் எத்தனங்கள்

இல்லாமல்கூட பெற்றுக் கொள்ள முடியும் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

ஏசய் 55:10-11, யோ 6:..-68, அப் 13:26, 1 கொரி 6:11, கலாத் 3:26-27, எபே 5:25-26. லூக் 7:30.

## <u>18 நியாயப் பிரமாணம் மற்றும் சுவிஷேசத்தைப் பற்றின உபதேசம்</u>

## <u>DOCTRINE OF THE LAW AND GOSPEL</u>

அ) தேவனுடைய வார்த்தையை சரியான முறையில் போதிக்க வேண்டுமென்றால் மிக முக்யமாக சுவிஷேசத்திற்கு மற்றும் நியாயப் பிரமாணத்திற்கு இருக்கின்ற வித்தியாசங்களை கச்சிதமான முறையில், சரியாக கவனிக்க வேண்டியிருக்கிறது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ரோம 4:15, கலாத் 3:21, உபா 27:26, ரோ 3:20, சங் 143:2.

ஆ) நியாயப் பிரமானம் மனுஷனுடைய பாவத்தை வெளிப்படுத்தி அதன் பயனாக நியாயப் பிரமாணத்தை சரியான முறையில் அனுசரிக்காதவர்கள் மேல் தேவனுடைய கோபம் வந்து நியாயப் பிரமாணத்தினால் என்ன என்ன காரியங்கள் நாம் செய்ய வேண்டுமோ, செய்யக் கூடாதோ என்பதை தெரியப்படுத்துகிறது. அது மாத்திரமல்லாமல் அவற்றை செய்வதற்கு எப்படிப்பட்ட சக்தியை, சகாயத்தைக்கூட அது கொடுப்பது இல்லை. ஆகவே தான் நியாயப் பிரமாணத்தினுடைய கிரியைகளின்மூலம் எந்த ஒரு மனுஷனும் இரட்சிக்கப்படமாட்டான் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். மேற்சொன்ன வாக்யங்களை பார்க்கவும்.

இ) சுவிஷேசம் என்பது கிறிஸ்துவின்மூலம் உண்டாகிற இரட்சிப்புக்கேதுவான கிருபையின் வார்த்தை என்று தெரியப்படுத்துகிறது. இதன் மூலம் மனுஷர்களில் பரிசுத்த ஆவியானவர் விசுவாசத்தின் மூலம் கிரியைச் செய்து அவர்களை இரட்சிக்கும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். 1 தீமோ 1:15, யோ 3:16-17, லூக் 2:10.

ஈ) நியாயப் பிரமாணத்தில் முழுமையாயிருக்கிற சாபத்தையும், தேவனுடைய உக்கிரகத்தையும் போதித்து அதே வேளையில் சுவிஷேசத்தில் இருக்கிற பரிபூர்ணமான மதுரத்துவத்தை, இனிமையைகூட கண்டிப்பாக நாம் போதிக்க வேண்டியிருக்கிறது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். கலாத் 3:10, லூக் 1:17.

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத கீழ்கண்ட எல்லா உபதேசங்களையும் நாங்கள் ஏற்க மறுக்கிறோம்

1. ரோமன் கத்தோலிக்கச் சபை, இவான்ஜிலிக்கல் கார்கிகேஷனல், மெதடிஸ்டுகள், ஆர்மேனியன்கள், இவான்ஜிலிக்கல் யுனைடெட் சபையினர் சொல்லுகிற சுவிஷேசம் என்பது நற்கிரியைகளைக் குறித்து சொல்லப்பட்ட ஒரு உபதேசம் மாத்திரமே என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 தீமோ 1:15, யோ 1:17, யோ 3:16, ரோ 10:15, கலாத் 1:6-9, எபே 5:15, 2 தெச 2:14, 2 தீமோ 1:10.

2. கியூக்கர்கள் சொல்லுகிறபடி சுவிஷேசம் என்பது பரிசுத்த ஆவியின்மூலம் மனுஷனுக்கு உடனே அனுகிரகிக்கப்படுகிற அந்தரங்க ஒளி என்ற வரமாயிருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். லூக் 4:18-19, எபே 1:13, எபே 2:17, ரோ 10:17.

3. ரோமன் கத்தோலிக்கச் சபையினர் சொல்லுகிறபடி சுவிஷேச வாக்கு தத்தங்கள் என்பது ஷரத்துக்களுடன் கூடினது மற்றும் யாராவது தேவனுடைய மற்றும் சபையினுடைய கட்டுத்திட்டங்களுக்கு அனுசரித்து ஜீவிக்கிறார்களோ அவர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்படும் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ரோ 10:5-8, ரோ 11:6, ரோ 4:16, அப். 16:31.

4. ரோமன் கத்தோலிக்கச் சபை மற்றும் மெதடிஸ்டுகள், சொல்லுகிறபடி நியாயப் பிரமாணத்தை அனுசரிக்கிற ஒவ்வொரு மனுஷனும் கிறிஸ்தவன் ஆவான் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். கலாத் 3:2-5, கலாத் 3:21-22, 2 கொரி 3:6.

5. இர் விங்கைட்கள், இவான்ஜிலிக்கல் காங்கிரிகேஷனல் சபை, ரோமன் கத்தோலிக்கச் சபை, ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ் சபை, பிரஸ்பைடிரியன்கள், மென்னோனைட்ஸ்கள், மோர்வியன்கள், கியூக்கர்கள், மோர்மோன்கள், ஆவியை போதிக்கிற பாப்டிஸ்டுகள், பாப்டிஸ்டுகள், மெதடிஸ்டுகள், இவான்ஜிலிக்கல் யுனைட்டட் பிரதர்சன், புதிய ஏற்பாடு கிறிஸ்தவர்கூட நியாயப் பிரமாண ஆசாரங்களை அனுசரிக்க வேண்டியிருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

எபி 10:1, கொலே 2:16, கலாத் 5:12, 13, அப் 15:10, 28-29, ரோ 14:5, 6, கலாத் 4:10-11, மாற் 2:27, கலாத் 5:3, கலாத் 2:3-6.

## 19 பரிசுத்த சாக்கிரமெந்துக்களைப் பற்றின உபதேசம்

## DOCTRINE OF THE SACRAMENTS

அ) சாக்கிரமெந்துகள் தேவன் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட உண்மையான கிருபையின் எத்தனங்கள். தேவனுடைய வார்த்தையுடன் சம்மந்தமுடைய இந்த கிருபையின் எத்தனங்கள் கொஞ்சம் பூமிக்குரிய பொருட்கள் பயன்படுத்தப்பட்டு அவைகளின்மூலம் மனுஷரெல்லாருக்கும் கிறிஸ்துவினுடைய மரண பாடுகளின்மூலம் சம்பாதிக்கப்பட்ட கிருபையை சம்பாதித்துக் கொண்டு தேவனுக்குள் முத்திரையிடப்படுவதற்கு பயன்படுத்தலாம் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். யோ. 3:5, கலாத் 3:5.

ஆ) கிறிஸ்து பரிசுத்த ஞானஸ்ஞானம் மற்றும் பரிசுத்த இராப்போஜன திருவிருந்து என்ற சாக்கிரமெந்துகளை ஸ்தாபித்தார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். மத் 28:18-20, லூக் 22:19-20, மத் 26:28.

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத கீழ்கண்ட எல்லா உபதேசங்களையும் நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1. ரோமன் கத்தோலிக்கச் சபை, ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ் சபையினர் சொல்லுகிறபடி ஞானஸ்ஞானம் மற்றும் திருவிருந்து மட்டும் இல்லாமல் இன்னும் ஐந்து சாக்கிரமெந்துக்கள் இருக்கின்றன, அவைகளை கிறிஸ் ஏற்படுத்தினார். அவைகள் எவை என்றால் திடப்படுத்துதல், திருமணம், ஆசாரிய அபிஷேகம், பிரயாசித்தம், மரண அவஸ்தை, என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

2. மென்னோனைட்கள், இர்விங்கைட்கள், மோர்மோன்கள், ஆறு சூத்திர பாஸ்டிஸ்டுகள் முதலானவர்கள் சொல்லுகிறபடி ஞானஸ்ஞானம் மற்றும் திருவிருந்து மாத்திரமே இல்லாமல் இன்னும் பாதங்களை கழுவுதல்,

எண்ணையினால் வியாதிஸ்தர்களை சொந்தமாக்குதல் மற்றும் பல காரியங்களை தேவன் ஏற்படுத்தினார் என்று சொல்லுகிற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

3. எபிஸ்கோபிலியன்கள், காங்கிரிகேஷனல்கிரிஸ்டியன்கள், இவான்ஜிலிக்கல் காங்கிரிகேஷனல் சபை, பிரஸ்பைடிரியன்கள், கல்வானிஷ்டுகள், பாப்டிஸ்டுகள், மாடானிஸ்டுகள், மென்னோனிகள், ஆர்மேனியன்கள், சுதந்திர புராட்டஸ்டெண்ட்ஸ்கள், முதலானவர்கள் சாக்கிரமென்துக்களை சார்ந்து கிருபையின் எத்தனங்கள் இல்லை. அவை கேவலம் கிருபைக்கு அடையாளமாய் மாத்திரமேயிருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

4. கியூக்கர்கள் மற்றும் யூனிட்டேரியன்கள் சொல்லுகிறபடி இந்த சாக்கிரமெந்துக்கள் என்பது எல்லா சமயத்திலும் கிறிஸ்தவர்கள் எல்லாருக்கும் கொடுக்கப்படவில்லையென்றும், உண்மையான கிருபையின் எத்தனங்களாக இல்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். லூக் 7:30, மத் 26:27, 1 கொரி 11:26, 1 பேது 3:21.

5. ரோமன் கத்தோலிக்கச் சபை சொல்லுகிறபடி இந்த சாக்கிமெந்துக்களை பெற்றுக் கொள்கிறவர்களுடைய விசுவாசத்தின் நிமித்தம் மாத்திரம் இல்லாமல் அவை தம்முடைய கிரியை தொடர்ந்து தேவனுடைய கிருபையை கொடுக்கும் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். அப் 8:36-37, 1 கொ. 11:27, 29, ரோ 4:11, எபி 11:6.

## 20 பரிசுத்த ஞானஸ்ஞானம் குறித்த உபதேசம்

## DOCRTINE OF THE HOLY BAPTISM

அ) பரிசுத்த ஞானஸ்ஞானம் என்பது வெறும் தண்ணீர் மாத்திரம் அல்ல அது தேவனுடைய கட்டளையுடன் கூடிய அவருடைய வார்த்தையுடன் இணைந்த தண்ணீர் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். மத் 28:19-20 மாற் 16:15-16.

ஆ) இந்த ஞானஸ்ஞானத்தின்மூலம் பாவ மன்னிப்பு உண்டாகும், மரணத்திலிருந்தும், சாத்தானிடத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டு தேவனுடைய வார்த்தையை அவர் அறிவித்த வாக்ய வாக்குத் தத்தங்களை நம்புகின்ற அனைவருக்கும் நித்ய இரட்சிப்பு நித்ய ஜீவனை கொடுக்கும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். அப் 2:38, யோ 3:5, கலா 3:26-27, தீத் 3:5-7, எபே 5:25-27, மாற் 16:16, மாற் 1:4.

இ) நமக்கு தேவனுடைய கனமான ஆசீர்வாதங்களை கிடைக்கும்படிச் செய்கிற ஞானஸ்ஞானத்தில் வெறும் தண்ணீர் மாத்திரம் இல்லை. அந்த தண்ணீருடன் கலந்து இணைந்துள்ள தேவனுடைய வார்த்தை மற்றும் அந்த தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கிற விசுவாசத்தின்மூலமே இப்படிப்பட்ட கனமான பெரிய ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ள முடியும். எப்படியென்றால் தேவனுடைய வார்த்தை இல்லாத தண்ணீர் வெறும் தண்ணீராய் மாத்திரமே இருக்கிறது. பரிசுத்த ஞானஸ்ஞானமாயிருக்காது. ஆகவே தேவனுடைய வார்த்தையோடு கூடிய தண்ணீர் பரிசுத்த ஞானஸ்ஞானம் ஆகும். எப்படியென்றால் கிருபை நிறைந்த ஜீவ தண்ணீர் பரிசுத்த ஆவியின்மூலம் புனர் ஜென்மத்தைக் கொடுக்கிற ஞானஸ்ஞானம் ஆகும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். மாற் 16:16, தீத் 3:5-7, எபே 5:26, கலாத் 3:26-27.

ஈ) இந்த ஞானஸ்ஞானத்தினுடைய அந்தராத்மா, நமக்குள் இருக்கிற பழைய ஆதாமினுடைய சகல பாவத்தையும், சாத்தானுடைய துர்க் கிரியைகளையும், ஒவ்வொரு நாளும் மனோத் துக்கத்தினாலும், பச்சாதாபத்தினாலும், மன வருத்தத்தினாலும், தினந்தோறும் சாக வேண்டும். தேவனுடைய சமூகத்தில் நீதிமானாக பரிசுத்தவானாக, எப்பொழுதும் பிழைத்திருக்கிற புதிய மனுஷன் ஒவ்வொரு நாளும் நம்மில் மறுபடியும் பிறந்து எழும்ப வேண்டும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். 1 கொரி 12:13.

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத கீழ்கண்ட உபதேசங்கள் எல்லாவற்றையும் நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1. யூனிட்டேரியன்கள், கியூக்கர்கள், சால்வேஷன் ஆர்மி, சேக்கர்கள், மாடர்னிஸ்டுகள், சொல்லுகிறபடி இந்த ஞானஸ்ஞானம் என்பது மிகப் பழமை வாய்ந்த சபைகளுக்கு மாத்திரமே. இப்பொழுது அது எம்மாத்திரம் அமுலில் இல்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

2. காங்கிரிகேஷனல் கிரிஷ்டியன்கள், பிரஸ்டிரியன்கள், கல்வானிஷ்டு சபை, பாப்டிஸ்டுகள், முதலானவர்கள், சொல்லுகிறபடி ஞானஸ்ஞானம் வெறுமான உண்மையாக அபிஷேகம் பெற்ற ஊழியர்கள் மாத்திரமே கொடுக்க வேண்டும் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ஏனென்றால், ஞானஸ்ஞானம் என்பது ஆத்துமாவுக்கு அவசரமான கிருபையின் எத்தனம் ஆகவே அதிக பரிசுத்தத்தோடு எந்த கிறிஸ்தவனாகிலும் இதை கொடுக்கலாம், அனுசரிக்கலாம். யோ. 3:5.

3. ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ் சபை, பாப்டிஸ்டுகள், காம்பலைட்கள், ஏழாம்

நாளை ஆசிப்போர், மோர்மோன்கள், சொல்லுகிறபடி மூழ்குதலே சரியான ஞானஸ்ஞானம் என்ற முறையை நாங்கள் நிராகரிக்கிறோம். ஏனென்றால், பாப்டிஸம் என்ற கிரேக்க வார்த்தைக்கு அர்த்தம் மூழ்குதல் மாத்திரமே அல்லாமல் கழுவுதல் மற்றும் தெளித்தல் என்ற அர்த்தமும்கூட இருக்கிறது. மாற் 7:4, லூக் 11:38, அப் 1:5, அப் 2:16-17, எபி 10:22, எபி 11:29, அப் 22:16.

4. ரோமன் கத்தோலிக்கச் சபை மற்றும் ஈஸ்ட்டரன் ஆர்தோடக்கஸ் சபையினர் சொல்லுகிறபடி ஞானஸ்ஞானத்தின் மூலம் கிறிஸ்தவர்கள் மாத்திரமே ஜீவியத்திற்கு லாபம் பெற்றுக் கொள்வார்கள். அது கேவலம் ஜென்ம பாவத்தை மற்றும் ஞானஸ்ஞானம் பெறுவதற்கு முன்பு செய்த பாவங்கள் மாத்திரமே பூர்த்தியாக மொத்தமாக எடுத்துப் போடப்படும் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 கொரி 6:11, கலாத் 2:27, கலாத் 5:24, ரோ 7:18-21, 1 தீமோ 1:15.

5. காங்கிரிகேஷனல் கிரிஷ்டியன்கள், பிரஸ்பைடிரியன்கள், கல்வானிஷ்டு சபை, பாப்டிஸ்டுகள், மெதடிஸ்டுகள், மோரேராவியன்கள், மென்னோனைட்ஸ்கள், இவான்ஜிலிக்கல் யுனைட்டைட் பிரதர்சன், இவான்ஜிலிக்கல் காங்கிரிகேஷனல், புதிய எருசலேம் சபை, அட்வண்ட் டிஸ்டுகள், முதலானவர்கள் சொல்லுகிறபடி ஞானஸ்ஞானம் என்பது பாவ மன்னிப்பு என்ற கிரியை நடப்பிக்காது. பாவத்திலிருந்து கழுவப்படுவதற்கு என்பதற்கு சாத்ய பூர்வமான ஒரு அடையாளமாக இருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

6. காமபெலைட்ஸ்கள், மோர்மோன்கள், சொல்லுகிறபடி விசுவாசம் மற்றும் கீழ்படிதலுள்ளவர்களுக்கு பதிலாக ஞானஸ்ஞானம் பாவ மன்னிப்பு

கொடுக்கும் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மாற் 16:16, தீது 3:5, ரோ 6:3, கலாத் 3:26-27, 1 கொரி 6:11.

7. ஏழாம் நாளை ஆசிரிப்போர் சொல்லுகிறபடி ஞானஸ்ஞானம் என்பது பாவ மன்னிப்பை கொடுக்காது ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சியில் பாவ மன்னிப்புக்காக இது அவசரமாயிருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

8. யூனிட்டேரியன்கள், சுதந்திர பாப்டிஸ்டுகள், கல்வானிஷ்டு சபை முதலானவர்கள் சொல்லுகிறபடி ஞானஸ்ஞானம் என்பது மறு ஜன்ம முழுக்கு சம்மந்தமுடைய ஸ்நானம் இல்லை சபையில் சேருவதற்கு நடத்துகிற ஆசார முறையாய் இருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

9. கியூக்கர்கள், சால்வேஷன் ஆர்மி, முதலானவர்கள் சொல்லுகிறபடி இரட்சிப்புக்காக தண்ணீர் ஞானஸ்ஞானம் அவசரம் இல்லை, ஆவியின் ஞானஸ்ஞானம் அவசரம் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ஏனென்றால், தீத் 3:5, பிரகாரம் ஞானஸ்ஞானம் பரிசுத்த ஆவியில் புதிதாக்கப்படுகிற மறு ஜன்ம முழுக்கு சம்மந்தமான ஸ்நானமாக இருக்கிறது.

10. மென்னோலைட்ஸ்கள், காம்பேலைட்ஸ்கள், பாப்டிஸ்டுகள், சொல்லுகிறபடி சிறிய வயதில் ஞானஸ்ஞானம் எடுத்துக் கொண்டவர்கள் வளர்ந்தபிறகு மறுபடியும் ஞானஸ்ஞானம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 2 தீமோ 2:13, ரோ 3:3-4, ரோ 11:29, 1 பேது 3:21, கொலே 2:11-12, எபே 5:25-27.

11. மோர்மோன்கள் சொல்லுகிறபடி மரித்துப் போனவர்களுடைய லாபத்தின் நிமித்தம் அவர்களுடைய மனுஷர்கள் ஞானஸ்ஞானம் எடுத்துக் கொள்ளலாம் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். அப். 2:38, ஆபகூப் 2:4, எபி 9:27.

12. கல்வானிஸ்டுசபை, பிரஸ்பைடிரியன்கள், மென்னானைட்கள், முதலானவர்கள் சொல்லுகிறபடி கிறிஸ்தவ தாய், தகப்பன்மார்களுக்கு பிறந்த குழந்தைகள் தேவனுடைய பார்வையில் அவர்கள் ஞானஸ்ஞானம் பெறாமற் போனாலும் பரிசுத்தமானவர்கள் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். யோவ 3:5-6, சங். 51:7, யோவா 1:17.

13. மாடர்னிஸ்டுகள், மோர்மோன்கள், செக்டேரியல் சபையின் ஜனங்கள் சொல்லுகிறபடி சிறிய குழந்தைகள் சகஜமாக அவர்களுடைய சுபாவத்தின்படியே அப்பாவிகள் மற்றும் பரிசுத்தர்கள் என்ற போதனையை நாம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறோம்.

14. மென்னோனைட்கள், பாப்டிஸ்டுகள், கேம்பெல்லைட்ஸ்கள், மோர்மோன்கள், ஏழாம்நாளை ஆசிரிப்போர், சொல்லுகிறபடி சிறிய குழந்தைகளுக்கு ஞானஸ்ஞானம் கொடுக்கக்கூடாது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத் 28:20, யோ 3:5-6, மாற் 16:15-16, மாற் 10:13-16.

15. யூனிட்டேரியன்கள், சால்வேஷன் ஆர்மி, ஆர்மேனியன்கள், இவான்ஜிலிக்கல் யுனைட்டட் பிரதர்சன், சொல்லுகிறபடி சிறிய குழந்தைகளுக்கு ஞானஸ்ஞானம் என்பது கேவலம் சபையினுடைய கட்டளை. ஆகவே நாம் அவற்றை கவனிக்கலாம் அல்லது

கடைப்பிடிக்காமல் போகலாம் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மாற் 10:14, மத் 18:10-11.

16. ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ் சபை, இவான்ஜிலிக்கல் காங்கிரிகேஷனல், ரோமன் கத்தோலிக்கச் சபை, மெதடிஸ்டுகள், ஆர்மேனியன்கள், கல்வானிஸ்டு சபை, இவான்ஜிலிக் கல் யுனைட்டட் பிரதர்கள், மென்னோனைட்ஸ்கள் சொல்லுகிறபடி சிறிய குழந்தைகளை தேவனை சரியாக விசுவாசிக்க மாட்டார்கள் என்ற போதனையை நாம் ஏற்க மறுக்கின்றோம் மத் 18:10-11, மத் 18:1-6.

## 21 பரிசுத்த திருவிருந்து பற்றின உபதேசம்

## DOCTRINE OF THE SACRAMENT OF THE ALTER OR THE LORD'S SUPPER

(அ) ஆல்ட்டர் சாக்கிரமெந்து அல்லது பரிசுத்த திருவிருந்து என்பது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய மெய்யான சரீரம், மெய்யான திரு இரத்தமாயிருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் அப்பத்திற்குளடளும், இரசத்திற்குள்ளும் புசித்து பாணம் பண்ணுகிறதற்கு கிறிஸ்துவே இந்த திருவிருந்தை ஏற்படுத்தினார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். லூக் 22:19-20, மத் 26:28 கலாத் 3 :15, 1 கொரி 11:28-29, மாற் 14:22-24.

(ஆ) பரிசுத்த திருவிருந்து என்கிற சாக்கிர மெந்துவில் பங்கு கொண்டு புசிப்பதின்மூலம், பாணம் பண்ணுவதின் மூலம் உண்டாகிற நன்மைகள் என்னவென்றால் பாவமன்னிப்பு உண்டாவதற்காக கொடுக்கப்படுகிறது. என்றும், சிந்தப்பட்ட சொல்லப்படுகிற வார்த்தைகளை கேட்பதின்

நன்மையை நமக்கு தெரியப்படுத்துகிறது எதனால் என்றால் இவ்வார்த்தைகளினாலே பரிசுத்த திருவிருந்து நமக்கு பாவமன்னிப்பையும், நித்திய ஜீவனையும் கொடுக்கிறது. ஏனென்றால் பாவமன்னிப்பு எங்கிருக்கிறதோ அங்கே நித்திய ஜீவன் இருக்கிறது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

மத் 11:28, 1 கொரி 11:28-29.

(இ) சரீரப் பிரகாரமாய் புசிப்பதின் மூலமும், குடிப்பதின் மூலமும் மாத்திரமேயல்ல. உங்களுக்காக கொடுக்கப்படுகிறது என்றும், பாவ மன்னிப்பு உண்டாகும்படி உங்களுக்காக சிந்தப்படுகிறது என்று சொல்லுகிற வார்த்தைகளினாலே இந்த ஆசிர் வாதங்கள் நமக்கு கிடைக்கிறது. சரீர சம்மந்தமான புசிப்பது, குடிப்பது என்பதுடன் கூட இந்த வார்த்தைகள் பரிசுத்த திருவிருந்தில் மிக முக்கியமானது. இவ்வார்த்தைகளை விசுவாசிக்கிறவர்களுக்கு பாவமன்னிப்பு கிடைக்கும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

மாற் 9:24

(ஈ) பரிசுத்த திருவிருந்தில் கலந்து கொள்வதற்கு பாத்திரவான்களாய் இருக்கத்தகுந்தவர்கள் யார் என்றால் உபவாசம் முதற்கொண்டு சரீர சம்மந்தமான பிரயாசங்கள் நல்ல சிட்சையாய் வெளியில் இருக்கிறது. ஆயினும் பாவமன்னிப்பு உண்டாவதற்கு உங்களுக்காக கொடுக்கப்பட்டது என்றும், சிந்தப்பட்டது என்றும் சொல்லப்படுகின்ற வார்த்தைகளை விசுவாசிக்கிறவனே அதற்கு பாத்திரவானாயிருந்து பெற்றுக்கொள்ள தகுதியுடையவன். நன்றாய் நல்ல ஆயத்தத்தோடு இருக்கிறவன் ஆவான். இந்த வார்த்தைகளை விசுவாசிக்காமல் சந்தேகிக்கிறவன் அதற்கு அபாத்திரனாயிருக்கிறான், ஆயத்தப்படாதவனாயும் இருக்கிறான்.

ஏனென்றால் உங்களுக்காக என்ற வார்த்தையை நம்புவதற்கு முழுமையான விசுவாசம் உடைய இருதயம் தேவையாயிருக்கிறது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். சங் 22:26.

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத கீழ்கண்ட உபதேசங்கள் அனைத்தையும் நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1. கியூக்கர்கள், சேக்கர்கள், சால்வேஷன் ஆர்மி, சபையினர் சொல்லுகிறபடி பரிசுத்த திருவிருந்து சாக்கிர மெந்து கிறிஸ்து எல்லாகாலத்திற்கும் ஏற்படுத்தவில்லை ஆகவே திருவிருந்து சாக்கிர மெந்துவை அனுசரிக்கலாம் அல்லது விட்டு விடலாம் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மாற் 14:24, 1கொரி 11:24, கலாத் 3:15.

2. காங்கிரி கேஷனல் கிரிஸ்டியன்கள், பிரஸ்பைடிரியன்கள், கல்வானிஷ்டு சபை, பாப்டிஸ்டுகள், மெதடிஸ்டுகள், ஆர்மேனியன்கள், யூனிட்டேரியன்கள், மென்னோலைட்கள், இவான்ஜிலிக்கல் காங்கிரிகேஷனல் சபை, மேமோரியன்கள் முதலானவர்கள் சொல்லுகிறபடி கர்த்தருடைய பரிசுத்த திருவிருந்துவில் சொல்லப்படுகிற வார்த்தைகள் எழுத்துப்பூர்வ அலங்காரத்துவமாக எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம், கலாத் 3:15, 1கொரி 10:16, 1 கொரி 11:26-28.

3. ரோமன் கத்தோலிக்கச்சபை சொல்லுகிறபடி மனந்திரும்பாதவர்களுக்கு ரொட்டியை மாத்திரம் கொடுக்கலாம் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.
(இந்த மத்திய காலங்களில் திராட்சை இரசத்தைக் கூட எல்லா இடங்களிலும் கொடுக்கிறார்கள்) மாற் 14:23, கலாத் 3:15.

4. மோர் மோன்கள் சொல்லுகிறபடி பரிசுத்த திருவிருந்து சாக்கிரமெந்துவில் கிறிஸ்து அநுகிரகித்த பதார்த்தங்களை கூட கொடுக்கலாம் என்பதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத் 26:26-29, லூக் 22:18, கலாத் 3:15.

5. காங்கிரிகேஷனல் கிரிஸ்டியன்கள், பிரஸ்பை டிரியன்கள் கல்வானிஸ்டு சபை, பாப்டிஸ்டுகள், யுனைட்டட் பிரதர்கள் காம்பேலைடஸ்கள், கியூக்கர்கள், முதலானவர்கள் சொல்லுகிற படி சிலுவையின் மீது கிறிஸ்துவின் சரீரம் பிட்கப்பட்டதற்கு அடையாளமாய் பரிசுத்த திருவிருந்து சாக்கிரமெந்துவில் கொடுக்கப்படுகிற ரொட்டி கூட அவருடைய சரீரத்தைப்போல் கண்டிப்பாக பிட்கப்படவேண்டும். என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத் 26:26-28, 1கொரி 10:16, சங் 33:4, லூக் 1:37.

6. எஸ்கிப்ளையன்கள், இவான்ஜிலிக்கல் யுனிட்டட் பிரதர்கள், காங்கிரிகேஷனல் கிரிஸ்டியன்கள், சால்வேஷன் ஆர்மி, டிரஸ்பைடிரியன்கள், பாப்டிஸ்டுகள், மெதடுஸ்டுகள், மோரேவியன்கள், ஆர்மேனியன்கள், கல்வானிஸ்டுகள், கல்வானிஷ்டு சபை, முதலாலனவர்கள் சொல்லுகிறபடி இந்த சாக்கிரமெந்துவில் கிறிஸ்துவினுடைய சரீரம் மற்றும் இரத்தம் கேவலம் ஆத்துமப் பிரகாரம் மாத்திரமே பெற்றுக் கொள்ளக்கூடும் ஆனால்வாஸ்தவமாக, உண்மையாக இல்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 கொரி 10:16, 2 கொரி 27, மத்தே 26:26-28.

7. ரோமன் கத்தோலிக்கச்சபை சொல்லுகிறபடி ரொட்டி மற்றும் திராட்சை இரசம் கிறிஸ்துவினுடைய சரீரம் மற்றும் இரத்தம் என்ற ரூபத்திற்குள் மாற்றப்படுகிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 கொரி 10:16.

8. ரோமன் கத்தோலிக்ச் சபை சொல்லுகிறபடி சாக்கிரமெந்து கொடுக்கிற பரிசுத்த ஊழியர் தனக்குத்தானே கிறிஸ்துவினுடைய சரீரமாக பாவித்துக் கொண்டு கிறிஸ்து மாதிரியாகவே கண்டிப்பாக ஆராதிக்க வேண்டும் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத் 26:26-27

9. சுவீடன்போர்க்யன்கள், சுதந்திரபாப்டிஸ்டுகள், மென்னோ னைட்ஸ்கள், இவான்ஜிலிக்கல் யுனைட்டட் பிரதர்கள், இவான்ஜிலிக்கல் யுனைட்டட் பிரதர்கள், இவான்ஜிலிக்கல் காங்கிரிகேஷனல் சபை, காங்கிரி கேஷனல் கிறிஸ்டியன் சபை, காம் பேலைட்ஸ்கள், பிரஸ்பைடிரியன்கள், மெதடிஸ்டுகள், யூனிட்டேரியன்கள், யூனிவர்ஸலின்டுகள், மோர் மோன்கள், முதலானவர்கள் சொல்லுகிறபடி திருவிருந்து என்பது கேவலம் கிறிஸ்துவின் மரணத்திற்கு ஞாபகார்த்தமே, இது பாவ மன்னிப்பை முத்தரித்து கொடுக்காது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். லூக் 22:29-10, மத் 26:26-28.

10. காங்கிரிகேஷனல் கிரிஸ்டியன்கள், சாதாரண கல்வானிஸ்டு சபை, எபிஸ்கோபிலியன்கள், இவான்ஜிலிக்கல் காங்கிரி கேஷனல் சபை, மெதடிஸ்டுகள், முதலானவர்கள் சொல்லுகிறபடி அபாத்திரமாய் எடுத்துக் கொண்டவர்கள் சாக்கிரமெந்துவில் மெய்யான கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் பெற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 கொரி 11:27-29.

11. ரோமன் கத்தோலிக்கச் சபை மற்றும் ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ்சபை சொல்லுகிறபடி சிறிய குழந்தைகளுக்குக் கூட இந்த சாக்கிரமெந்துவை கொடுக்க வேண்டியிருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 கொரி 11:28-29.

12. ரோமன் கத்தோலிக்கச் சபை மற்றும் ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ்சபை சொல்லுகிறபடி பரிசுத்த திருவிருந்தில் ஜீவனோடிருக்கிறவர்களின் பாவத்திற்காகவும் மற்றும் மரித்துப் போனவர்களுடைய பாவத்திற்காகவும் ஆசாரியராகிய கிறிஸ்து, சரீரத்தை இரத்தத்தை சிந்தாமல் கச்சிதமாக பிரயாசித்தம் செய்ய வேண்டியிருக்கிறது என்பதனை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். (இப்படிப்பட்ட முறை பரிசுத்த சாக்கிரமெந்துவில் வேஷதாரமாக இருக்கிறது)

மத் 26:26-27, 1 கொரி 11:26, எபி 10:18, எபி 9:22, 1பேது 3:18

## 22 சபையைக் குறித்த உபதேசம்

## DOCTRINE OF THE CHURCH

(அ) இந்த பூமியின் மீது கேவலம் ஒரே ஒரு பரிசுத்த சபை இருக்கிறதென்றும், அது கிறிஸ்துவினுடைய அதிகாரத்தோடு அவரால் ஒன்று சேர்க்கப்பட்டதாயிருக்கிறது என்று நாங்கள் விசவாசிக்கிறோம். எபி 2:19-22, 1 கொரி 12:27.

(ஆ) யார் கிறிஸ்துவை தம் மெய்யான இரட்சகராக நம்புகின்றார்களோ அவர்கள் மாத்திரமே இருக்கின்றார்கள் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். மத் 16:18, யோ 11:51-52, அப் 16:31, யோ 10:27-28

(இ) இந்த ஒரே பரிசுத்த சபையயின் மாதிரியாக விசுவாசிகள் அந்நியோத்திலும், ஐக்யத்திலும் இருந்து காணப்படுகிற சபை உறுப்பினர்களுடன் ஐக்கியமாய், ஒரு மனப்பட்டவர்களாய் இருப்பது மற்றும் சபை உண்மையான கிறிஸ்தவ உபதேசங்களை போதித்து, சாக்கிர மெந்துக்களை சரியான முறையில் அமல்படுத்துவதென்று நாங்கள் விசவாசிக்கிறோம். மத் 28:19-20, மாற் 16:15-16, 1 பேது 4:11.

(ஈ) ஒரு சில கலப்பான சபைகளில் தேவனுடைய இரக்கத்தினால் உறுப்பினர்கள் சேர்கிறார்கள். அந்த சபைகள் தேவனால் தடை செய்யப்படுவதின் காரணம் மனுஷர்கள் அதை சபைகளில் சேர்ந்தாலும், சேராமற் போனாலும், தேவனுடைய வார்த்தை விதைக்கப்பட்டு விஸ்தாரிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய தீர்மாணமாயிருக்கிறது என்று நாங்கள் விசுவாசிக்றோம்.

மத் 7:15, 2 யோவா 10:11, 1 யோவா 4:1, சங் 26:5-6, மத் 10:32-33, கலாத் 5:9.

(உ) ஆகவே அந்த மாதிரியான கலப்பான சபைகளில் பலவந்தமாய் சேர்க்கப் படுகின்ற கிறிஸ்தவர்கள் எல்லாரும் உடனே அவைகளை விட்டு விட்டு மெய்யான புதிய சபை சகவாச ஐக்கியத்தை தேடி அவைகளில் கலந்து இருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறதென்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

கலாத் 5:9, 2 தீமோ 2:17, ரோம 16:17, 1 கொரி 10:21.

(ஊ) தப்பான கெட்ட போதகர்களால் நிறம்பியிருக்கிற சபை ஐக்யம் மற்றும் சபை சகவாஷம் கிறிஸ்துவினுடைய கட்டளையை மீறுவதற்காகவே தேவனுடைய வார்த்தைக்கு அவமானம் உண்டாக்குவதகு அமோல்யமான, மிக முக்யமான தேவனுடைய வார்த்தையை இழந்து விடுகிறார்கள். இதுவே சபை புறம் பாக்குதலுக்கு மூலக்காரணமாயிருக்கிறது. என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

1 இராஜ 18:21, எபே 4:3-5, 2 கொரி 6:14-18, 2 யோ 10:22.

(எ) கிறிஸ்து தன்னுடைய சபைகளுக்கு அநுகிரகித்துக் கொடுத்த ஆவிக்குறிய வரங்களுக்கு கிறிஸ்துவர்கள் அனைவரும் உண்மையான சமானமான உரிமைக்காரர்களே அல்லாமல் தேவனுடைய ஆவிக்குறிய வல்லமை விசுவாசிகள் அனைவருக்கும் சமானமாய் சாஸ்வதமாய் அனுகிரகிக்கப்

பட்டுள்ளதே யல்லாமல் யார் ஒருவருக்கோ அல்லது பிரத்யேக மான தனிப்பட்ட மனுஷனுக்கு என்றால் பாவிகளுக்கு, கண்காணிகளுக்கு, ஊழியர்களுக்கு, லௌகீக நாட்களுக்கு சபை அதிகாரம் அந்த ஆவிக்குறிய வரங்கள் தத்தம் செய்து அர்ப்பணிக்கப்படவில்லை என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

1 கொரி 3:21, மத் 16:15-19, மத் 18:17-20, அயத 20:22-23, மத் 28:19-20.

***எச்சரிப்பு*** **:** வார்த்தை உபதேச விஷயத்தில் சரியான தீர்ப்பினை மற்றும் தீர்மாணத்தை எடுக்கிற அதிகாரம் பொறுப்பு விசு வாசிகளாகிய கிறிஸ்தவர்கள் எல்லாருக்கும் இருக்கிறது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

1 கொரி 10:15, 1 பேது 4:11, ரோ 16:17,18

(ஏ) சபை காரிய விவகாரங்களில் பலதரப்பட்ட பொறுப்புக்களை நிர்வகிக்கிற தலைவர்கள், அதிகாரிகள், சபை உறுப்பினர்களே தங்களுக்கு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பவர்கள் என்பதை ஞாபகம் வைத்து தம்முடைய வேலைகளை சரியாக நிர்வகித்து பிரதிப்பலன்கூட தம்முடைய சேவையிலே நடப்பித்து கொள்ள வேண்டும் என்று நாம் விசுவாசிக்கிறோம்.

கொலே 4:17, மத் 18:17-20, 1 யோ 4:1.

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத கீழ்கண்ட உபதேசங்களை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1) ரோமன் கத்தோலிக்கச் சபையினர் சொல்லுகிறபடி பாவத்தினுடைய அதிகாரத்திற்கு கீழ்படிகிற ஒவ்வொருவரும், நல்லவர்கள் அல்லது, கெட்டவர்கள் யாராயிருந்தாலும் திருச்சபையில் சேர்ந்தால் அவர்களுக்கு

இரட்சிப்பு கொடுக்கப்படுகிறது என்ற அவர்களுடைய போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 2 தெச 2:8-10, ரோ 12:5, 1 கொரி 12:27, எபி 3:6, எபேசி 2:19-22, 1 பேது 2:5, மத் 23:8.

2) கியூக்கர்கள் சொல்லுகிறபடி அந்தரங்க ஒளியின்மூலம் வெளிச்சமாக்கப்பட்ட பிரதி ஒவ்வொருவரும் என்றால் அவர்கள் கிறிஸ்தவர்களே ஆயினும், யூதர்களே ஆயினும், கிரேக்கராயினும், அல்லது அந்நியர்களாயினும், யாராயிருந்தாலும் சரி ஒரே ஐக்ய சக வாசத்தில் இருந்தால் அவற்றை சபை என்று சொல்லுகிற அவர்களுடைய போதனைகளை நாங்கள் நிராகரிக்கிறோம். சங் 147:20, அப் 5:12, யோவா 14:6, 1 கொரி 12:3.

3) மோர்மோன்கள் சொல்லுகிறபடி கிறிஸ்து சபையின் நாட்களில் மோர்மோன் சபையாக மாறினது இச்சபையைச் சேர்ந்தவர்கள் அனைவரும்கூட அந்நியர்களே என்ற போதனையை நாம் ஏற்க மறுக்கிறோம். வெளி 2:9, கலாத் 6:16.

4) ரோமன் கத்தோலிக்கச் சபை, எபிஸ்கோபல்சபை, ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ் சபை, கதலிக் அப்போஸ்தலர்கள் சபை, சொல்லுகிறபடி குரு பீட ஆதிகாரம் அப்போஸ்தலர் வாரிசு தத்துவம் இல்லாமல் சபை அனுமதி அசல் ஏற்பாடு செய்வது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். காரணம் அப்போஸ்தல வாரிசுதாரர் உரிமைக் குறித்து வேதாகமத்தில் சொல்லப்படவில்லை. 2 தீமோ 2:19, 1 கொரி 10:17, 1 பேது 2:5, மத் 23:8.

5) கல்வானிஷ்டு சபை, மென்னோனைட்ஸ்கள், ஆர்மேனியன்கள் சொல்லுகிறபடி வார்த்தை மற்றும் சாக்கிரமெந்துக்கள் உண்மையான சபைக்கு அடையாளம் இல்லை என்பதனை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத் 19:20, 1 கொ 10:17, 1 பேது 2:5, மத் 23:8.

6) மென்னோனைட்ஸ், இவான்ஜிலிக் கல்யுனைட்டட் பிரதர்ன்சன் சொல்லுகிறபடி காணப்படுகிற சபையில் மாயக்காரர்கள், வேஷக்காரர்கள், வஞ்சனை செய்பவர்கள் இருக்கமாட்டார்கள் என்பதை நாங்கள் நிராகரிக்கிறோம். மத் 25:1-2, மத் 13:24-26, மத் 13:47-48, மத் 22:10-14, அப் 20:29-30.

7) ரோமன் கத்தோலிக்கச் சபையினர் சொல்லுகிறபடி அவர்களுடைய சபை தவறே செய்யாது என்ற போதனையை, நாங்கள் நிராகரிக்கிறோம். ஏனென்றால் கிறிஸ்து மற்றும் அவர் வார்த்தையில் தவறு இல்லையாயினும், எதிலாவது, ரோமன் கத்தோலிக் சபையிலே தப்பும் தவறும் உடையதாயிருக்கிறது. 2 தீமோ 2:19, யோவா 8:31-32.

8) ஷேக்கர்கள் சொல்லுகிறபடி அசல் உண்மையான கிறிஸ்தவ சபை என்பது எப்போதோ மறைந்து போனது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். சங். 46:5-6, மத் 28:19, மத் 16:18, மத் 24:14, லூக் 21:2-4.

9) இர்விங்கைட்ஸ்கள், மோர்மேன்கள், ஏழாம் நாளை ஆசிரிப்போர் அட்வெண்ட்டிஸ்டுகள், கிறிஸ்டியன் கத்தோலிக் சபை, முதலானவர்கள் சொல்லுகிறபடி ஆவிக்குரிய அற்புத வரங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சபைக்காக மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். (இம்மாதிரியான போதனையை ஹோலினஸ் சபை, பெந்தோகொஸ்தே சபை மற்றும் கரிஸ்மிடிக்சைதன்யக்வாதிகள் கூட சொல்லுகிறார்கள். உப 13:1-3, மத் 24:24, 2 கொரி 2:12.

10) கல்வானிஸ்டுகள் சபை, பாப்டிஸ்டுகள், மெதடிஸ்டுகள்,

பிரஸ்பைடிரியன்கள், காங்கிரிகேஷனல் கிரிஸ்டியன்கள், ஆர்மேனியன்கள், மோரேவியன்கள், இவான்ஜிலிக்கல் காங்கிரிகேஷனல் சபை, காம்பெலைட்ஸ்கள், யூனிட்டேரியன்கள், கதலிக் சபை, முதலானவர்கள் சொல்லுகிறபடி உபதேசத்தினுடைய பரிபூர்ணம் என்பது யாருக்கும் வராது. ஆகவே பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த கிறிஸ்தவ சபைகள் உபதேச பேதங்களை கலந்து வேறு கூட்டமாய் தனியாய் இருப்பதைவிட்டு ஒன்றாய் சகவாஷமாய், ஐக்யப்பட்டிருக்கலாம் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எபே 4:3-5, கலாத் 5:9, ரோ 16:17, தீத்து 3:10-11, 2 யோவா 10, 11, 1 கொரி 10:21, 1 இராஜ 18:21, 1 யோவா 4:1, எபி 23:31, வெளி 18:4.

## 23 ஊழியம் பற்றின உபதேசம்

## DOCTRINE OF MINISTRY

அ) ஊழியர்களின் சேவை, ஊழியம் என்பது தேவனுடைய சட்டமாயிருக்கிறது. அதாவது கிறிஸ்தவ ஊழியர்கள் சுவிஷேசத்தை வியாபித்து பரப்ப வேண்டும் என்ற உத்தேசத்தில் பல்வேறு ஸ்தலங்களில் கிறிஸ்தவர்கள் ஒன்றாக கலந்து கொண்டு சேவையின் ஊழியங்களைச் செய்ய வேண்டும். தனிப்பட்ட முறையில் இரகசியமாக, குடும்ப எல்லைக்குட்பட்டே அல்லாமல், பகிரங்கமாககூட ஊழியம் செய்வதற்கு, சாக்கிரமெந்துக்களை சரியான முறையில் நடப்பிப்பதற்கு அவர்களுக்கு கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட சபை அதிகாரம் கொடுக்கப்பட்டது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். அப் 14:23, 2 தீமோ 2:2, எபேசி 4:11, அப் 20:28, 1 கொரி 4:1.

ஆ) ஆனால் இந்தச் சேவை ஊழியம் என்பது மற்ற எந்தச் சக்தியின்மீதும்

ஆதாரப்பட்டிருக்காமல் கேவலம் வார்த்தையினுடைய வல்லமைமீது மாத்திரமே ஆதாரப்பட்டு நடக்க வேண்டும். அதாவது ஊழியம் செய்கிற ஊழியக்காரர் தேவனுடைய வார்த்தையை கிறிஸ்தவர்களுக்கு எப்பொழுதும் போதித்தாலும் எங்கே போதித்தாலும் அதற்கு கீழ்படிய வேண்டிய பொறுப்பு அவர்கள்மீது இருக்கிறது. ஆனால் அந்த ஊழியக்காரர் தன்னுடைய போதனையில் தேவனுடைய வார்த்தையை தாண்டி போயிருந்தால் கிறிஸ்தவர்கள் கண்டிப்பாக அதை ஏற்றுக் கொள்ளாமல் அதை கண்டிக்க வேண்டியிருக்கிறது. இதன்மூலம் அந்த ஊழியர் கிறிஸ்து வார்த்தைக்கே விசுவாச பாத்திரராய் இருக்க வேண்டும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

1 பேது 4:11, தீத் 1:14, எபி 13:17, லூக் 10:16, மத் 23:8, மத் 18:17-20, யோவா 20:22-23.

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத கீழ்கண்ட உபதேசங்கள் அனைத்தையும் நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1) கியூக்கர்கள் சொல்லுகிறபடி இந்தச் சேவை ஊழிய முறையை தேவன் ஸ்தாபிக்கவில்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எபேசி 4:11, அப் 20:28, 1 கொரி 4:1, தீது 1:5.

2) ரோமன் கத்தோலிக் சபை, ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ் சபையினர் சொல்லுகிறபடி, இந்த சேவை ஊழியமானது கொடுக்கப்படவில்லை கேவலம் அப்போஸ்தலர்களுக்கு மற்றும் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு எப்படியென்றால் பிஷப்களுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத் 18:17-20, மத் 18:15-19, யோ 20:22-23, மத் 28:19-20, 1 பேது 2:5-9.

3) கல்வானிஸ்டு சபை, பிரஸ்பைடிரியன்கள், மெதடிஸ்டுகள், இவான்ஜிலிக்கல் யுனைட்டெட் பிரதர்கள், இவான்ஜிலிகல் காங்கிரிகேஷன்கள், இர்விங்கைட்ஸ்கள், முதலானவர்கள் சொல்லுகிறபடி, இந்த சேவை ஊழியம் என்பது மொத்தம் சபைக்கு கொடுக்கப்படவில்லை. சபையிலே ஒரு சிலருக்கு விஷேசமான தனிப்பட்டவர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டது என்ற போதனையை நாங்கள் நிராகரிக்கிறோம். 1 கொரி 3:21-23, 2 கொ 4:5, சங் 68:11, 1 கொரி 4:1, 1 பேது 2:9, 1 பேது 5:20-23.

4) கியூக்கர்கள், யூனிட்டேரியன்ள், ஆவியை ஆராதிப்பவர்ள், ஒரு சில கல்வானிஷ்டு சபை, மெதடிஸ்டுகள் முதலானவர்ள் சொல்லுகிறபடி தேவனுடைய விஷேசமான அழைப்பு இல்லாமல் யாராகிலும் பகிரங்கமாக சபையில் போதிக்கலாம் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எ. 23:21, ரோ 10:5, 1 கொரி 12:29, எபி 5:4, யோசுவா 3:1.

5) இர்விங்கைட்ஸ்கள், கியூக்கர்கள், மெதடிஸ்டுகள் முதலானவர்கள் சொல்லுகிறபடி தேவனுடைய சபையிலே காரிய சித்தியில்லாதவர்களைகூட இந்த நாட்களில் உடனே தேவன் தன்னுடைய ஊழியக்காரர்களாக அழைக்கக்கூடும் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம் 1 தீமோ 3:2, 2 தீமோ 2:2 தீத் 1 5.

6) ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ், இவான்ஜிலிக்கல் காங்கிரிகேஷனல் சபை, ரோமன் கத்தோலிக்கச் சபை, மெதடிஸ்டுகள், மோர்வியன்கள், இவான்ஜிலிக்கல் யுனைட்டட் பிரதர்ன்கள் அழைக்கப்படுதல் என்ற கனம் சபை முழுவதுக்கும் கொடுக்கப்படவில்லை ஆயினும் ஆவிக்குரிய

சபையின் தலைவர்களான பிஷப்புக்கள், பெரியவர்கள், முதலானவர்கள் கொடுக்கப்பட்டது என்ற போதனையை நாம் ஏற்க மறுக்கிறோம். மத் 18:17-20, யோவா 20:22-23, 1 கொரி 3:21-23, 2 கொரி 4:5, 1 பேது 2:9, 5:2-3.

7) ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ் சபை ரோமன் கத்தோலிக்கச் சபை, இர்விங்கைட்ஸ்கள், மோர்மோன்கள், முதலானவர்கள், சொல்லுகிறபடி ஆசாரியர்களுக்கு கொடுக்கிற அபிஷேகத்தை சாக்கிரமெந்து, பரிசுத்த ஆவியானவர் பொழிவதற்காக, கிருபை கொடுக்கப்படுவதற்கு மற்றும் சிறந்த குணமுள்ளவராக முத்தரிக்கப்படுவதற்காகவும் மாத்திரமே கிறிஸ்துவினால் ஸ்தாபிக்கப்பட்டது என்பதை நாம் ஏற்க மறுக்கிறோம்.

8) ரோமன்கத்தோலிக்கச் சபை, டாஸ்ட்டின் ஆத்தோடெக்ஸ் சபை, இர்விங்நைட்ஸ்கள், மோர் மோன்கள், தேலானவர்கள் சொல்லுகிற படி படிப்புகளுனால் அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் மூலம், பெரியவர்களினால் அபிஷேகம் செய்யப்பட்டவர்களே உண்மையான சபை ஊழியர்கள் என்ற போதனையை நாங்கள் நிராகரிக்கிறோம். மத் 18:17-20, அப் 1:15-26, அப் 6 : 1-6.

9) கியூக்கர்கள், இவான்ஜிலிக்கள் யுனிட்டட் பிரதர்கள் சால்வே□ன் ஆர்மி, மற்றும் கல்வானிஷ்டு சபை, சொல்லுகிறபடி சபை ஊழியர்களாக ஸ்தீரிகள் கூட பகிரங்கமாக உபதேசிக்கலாம், மற்றும் பிரசங்கிக்கலாம் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1 கொரி 14:34, 1 தீமோ 2:11-12.

10) ரோமன் கத்தோலிக்கச் சபை, ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ் சபை,

பிரஸ்பைடிரியன்கள், கிர் விங்கைட்ஸ்கன், முதலானவர்கள், சொல்லுகிறபடி சபையின் திட்டத்தில் பலவித பதவிகள் தகுதிகள், தெய்வீகமாக ஆரம்பிக்கப்பட்ட தேயல்லாமல் மனுஷனுடைய சம்மந்தம் இல்லை என்பதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 பேது 5:1, 1 கொரி 3:5, யோவா 13:13:14, மத் 23:8-10, (சுவிஷேச ஊழியம் என்பது சபையில் அதி அவசரமான காரியம். இவற்றை ஆதாரமாக செய்து கொண்டு சபையில் எல்லா பதவிகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும், அதுவே அல்லாமல் இந்த பதவிகளில், தகுதிகளில் எவ்விதமான பேதங்களையும், வித்தியாசங்களையும் கர்த்தர் சொல்ல வில்லை. எல்லாரும் சாதாரண மானவர்களே. எல்லா பதவிகளும் கூட சாதாரணமான ஹோதாவை உடையதாயிருக்கிறது. இதற்கு காரணம் கர்த்தரே எல்லாரைக் காட்டிலும் பெரியவர். மீதி சபை பதவிகள் இருப்பவர்கள் சகோதரர்களின் ஒரு பாகமாயிருக்கிறார்கள். மத் 23:8-10.

11) ரோமன்கத்தோலிக்கச் சபை, ஈஸ்ட்டின் ஆர்தோடக்ஸ் சபை, இர்விங்கைட்ஸ்கள், மோர் மோன்கள், சொல்லுகிறபடி கேவலம் வார்த்தையானால் ஊழியர்களாக அபிஷேகம் செய்யப்பட்டவர்களே ஆசாரியர்கள் மீதி விசுவாசிகள் ஆசாரியர்கள் ஆக மாட்டார்கள், என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1பேது 2:9, வெளி 1:5-6, வெளி 5:10, 1 கொரி 3:5. 1கொரி 3:5, (சுத்தமான பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகளின் முன்னால் கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஆசாரியர்களே ஆகவே பழைய ஏற்பாட்டு லேவியர்கள் முறையில் ஊழியக்காரர்கள் விஷேசித்த வண்ணமாக ஆசாரியப் பணியை செய்ய முடியாது) எபி 7:17,18, தீமோ 2:5, எபி 4:16.

12. ரோமன் கத்தோலிக்கச்சபை மற்றும் ஈஸ்ட்டின் ஆர்தோடெக்ஸ் சபையினர்

சொல்லுகிறபடி ஆசாரியர்கள் மாத்திரமே பாவத்தை மன்னிக்க முடியும் ஏன்ற போதனையை நாங்கள் நிராகரிக்கிறோம். 1பேது 2:9, மத் 18:17-20, யோவா 20:22-23. (அழைக்கப்பட்ட மற்றும் அபிஷேகம் செய்யப்பட்ட தேவனுடைய வசனத்தின் ஊழியக்காரர்கள் இவ்விதமாக பாவங்களை மன்னித்து தேவனுடைய பெயரினால் பாவ மன்னிப்பை அறிவித்து நம் பிரிய கர்த்தராகிய கிறிஸ்துவுக்கு அவர்களுக்கு வித்தியாசம் இல்லாமல் போகிறது. பாவ மன்னிப்பு கேவலம் கிறிஸ்து மூலம் மாத்திரமே சாத்யமாகிறது. ஊழியர்களுக்கு ஊழியத்தின் திறவுகோல் அதிகாரம் மாத்திரமே கொடுக்கப்பட்டிருக்கிறது.)

13. கல்வானிஸ்டு சபை, எபிஸ்கோபிளயன்ஸ்கள், இர்வங்கட்ஸ்கள், யூனிட்டேரியன்கள், சுதந்திரபுராட்டஸ்டெண்ட்கள், சொல்லுகிறபடி வார்த்தையின் ஊழியர்கள் உண்மையாக மற்றும் யதார்த்தமாக பாவத்தை மன்னிக்க மாட்டார்கள், ஆனால் அவர்கள் பாவ விமோச்சனத்தை பிரகடணம் செய்வார்கள். என்பதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மாற் 2:7-10, யோ 20:22-23, 2 கொரி 4:5.

14. ரோமன் கத்தோலிக்கச்சபை மற்றும் ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ் சபை சொல்லுகிறபடி ஆசாரியர்களிடத்தில் இரகசியமாக பாவங்களை ஒப்புக் கொள்வது என்பது தேவனால் கட்டளையிடப் பட்டது. மற்றும் பச்சதாப சாக்கிரமெந்துவில் இது ஒரு பாகமாயிருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். யோவா 20:22-23, மத் 9:2, 2 சாமு 12:13. (இரகசியமாக ஆசாரியர்கள் எதிரில் பாவங்களை ஒப்புக்கொள்வது என்பது தேவனால் கட்டளையிடப்படவில்லை. இது தனிப்பட்ட முறையில் தனக்குத்தானே தேவனுடைய சமூகத்தில் பாவ அறிக்கை செய்வதே உன்னதமான வழி).

15. கல்வானிஸ்டு சபை சொல்லுகிறபடி வார்த்தையின் ஊழியர்களின் முன்பு இரகசியமாக பாவங்களை ஒப்புக்கொள்வது என்பது பாவத்தின் தாக்கம் ஆகவே அதை நிராகரிக்க வேண்டும் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

16. ரோமன் கத்தோலிக்கச் சபையினர் சொல்லுகிறபடி பாவ அறிக்கையில் தான் செய்த எல்லா பாவங்களையும் வரிசையாக ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது. இதன் மூலம் எந்த பாவம் தீவிரமானதோ அவைகளுக்கு ஆசாரியன் பரிகரிப்பதிலே சரியாக தீர்ப்பு தீர்த்து அந்த பாவியை பூரண திருப்திப்படுத்த முடியும் என்பதனை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். சங் 19:12, மத் 6:12, வெளி 11:5-6, வசனத்தின் ஊழியக்காரன் தேவனுடைய வார்த்தையை பிரகடனப் படுத்துவது மற்றும் பரிசுத்த சாக்கிர மெந்துக்களை சரியாக சபைகளில் நிர்வகிப்பது தவிர வேறு ஒரு வேளை எதுவும் இல்லை. அவன் பாவிக்கு பூரண திருப்தி உண்டாகும்படி அவர்களுடைய தீவிரமான பாவத்தை கண்டுகொண்டு அவைகளை மன்னிப்பதற்கு அவன் நியாதிபதி அல்ல. பாவிகள் இதுபோன்ற வேலைகள் மூலம் அவர்களுடைய பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட மாட்டார்கள். கேவலம் கிறிஸ்துவின் மேல்வைக்கிற விசுவாசத்தின் மூலம் கிருபையின் மூலம் மாத்திரமே இரட்சிக்கப்படுவார்கள்.)

17. ரோமன் கத்தோலிக்கச் சபை, ஈஸ்ட்டரன் ஆர்தோடக்ஸ்சபை, எபிஸ்கோபிலியன்கள், பிரஸ்பை டிரியன்கள், மெதடிஸ்டுகள், இவான்ஜிலிக்கல், யுனைட்டட் பிரதர்ஸ்கள், இவான்ஜிலிக்கல் காங்கிரிகேஷனல் காரர்கள், சொல்லுகிறபடி ஊழியத்தின் திறவு கோல் அதிகாரம் கேவலம் தெரிந்துக் கொள்ளப்பட்ட ஆவியினால்

நடத்தப்படுகிறவர்களுக்கு தவிர சபை முழுவதற்கும் இல்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத் 18:15-20, 1 தீமோ 5:20, 1 கொரி 5:11-13, 2 கொரி 6:8.

18. அநேக திருச்சபையினர் சொல்லுகிறபடி சபையின் மேய்ப்பன் என்பவர் வாடகைக்கு அமர்த்திக் கொள்வதற்கு, நீக்கி விடுவதற்கு தகுதி யுடைய ஒரு உத்தியோகஸ்தர் என்பதனை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். தீத் 2:15, எபி 13:7,17.

***கவனிக்கவும் :*** ஊழியத்திற்கு சம்மந்தமுடைய பைபிள் உபதேசங்களை கத்தோலிக் மற்றும் கல்வாணிஸ்டு சபையினர் தள்ளிவிடுகிறார்கள்.

## 24 அந்திக் கிறிதுவைப் பற்றின உபதேசம்.

## DOCTRINE OF THE ANTICHRIST

(அ) நாம் விசுவாசிப்பது என்னவென்றால் பெருமைக்குரிய, கனம் பொருந்திய இந்த அந்திக்கிறிஸ்து என்பவன் ரோமன் கத்தோலிக்க சபை போப்புக்களின் காலத்தில் உற்பத்தி யானான். எதனால் என்றால் வேதாகமத்திலே சொல்லப்பட்ட மற்றும் முக்கியமாக 2 தெசலோனியக்கர் நிருபத்தில் 2 அதிகாரத்தில் அந்திக் கிறிஸ்து குறித்து சொல்லப்பட்ட ஈனமான, மோசமான விஷயங்கள் இந்த ரோமன் கத்தோலிக்கச் சபை போப்பு மற்றும் அவருடைய உதவிக்காரர்கள், அவரைச் சார்ந்தவர்கள் செய்கின்ற காரியங்களில் சரியான ரூபம் இருக்கிறது. ஏனென்றால் இந்த ரோமன் போப்பு அவன் ஒருவனே இந்த பூமியின் மீது கிறிஸ்துவினுடைய உன்னதமான நாமத்தை தரித்துக் கொண்டிருப்பவர் என்று கிறிஸ்துவின் நாமத்தின் கீழ் அநேகர்களை தேவனுடைய வார்த்தைக்கு தேவனுடைய

ஆசிர்வாதத்திற்கு தூரப்படுத்துவதின் மூலம் ஜனங்களை நித்ய நரகத்திற்கு பாத்திரர்களாக செய்கின்றான். இவ்விதமாக சபையிலே பகிரங்க ஆராதனையில் பொய்யான அடையாளங்களோடு, குறிகளின் மூலமாக, குறிப்புகளின் மூலமாக, மிகப்பெரிய மாயத்தோடு ஜனங்களை மயக்குகிற இவனைக் குறித்து நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது.

(ஆ) 2 தெசலோனிக்கியர் நிருபத்தில் 2ஆம் அதிகாரத்தில் கிறிஸ்துவ சபைக்கு மிகப் பெரிய விரோதியாக சொல்லப்பட்டவன் இந்த ரோமன் கத்தோலிக்கச்சபை போப்பாக நாம் அடையாளப்படுத்த முடியும். ஆகவே அந்திக்கிறிஸ்து குறித்து எதிர்பார்த்து அவனுடைய வருகை விரைவிலே நடக்கப்போகிற பெரிய சரித்திரப் பூர்வமான நிகழ்ச்சியாக பாவிக்கிற அநேகருக்கு இந்த ரோமன் கத்தோலிக்கச் சபையிலே சர்வ அதிகாரமுடைய இந்த போப் என்பவனே அந்நிக்கிறிஸ்து என்ற சத்தியத்தை தெரியப்படுத்தி அவர்களுடைய தப்பான போதனையில் விழாமல் பார்க்க வேண்டிய பொறுப்பு நம்மீது இருக்கிறது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். மேற்சொன்ன இரண்டு விஷயங்களுக்கு இந்த வார்த்தைகளை பார்க்கவும். 2 தெச 2; 1தீமோ4:2-3, 2பேது 2:19-21, தானி 11, வெளி17:9-18, வெளி 13:13, யூதா 8.

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத போதனைகளை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1. ரோமன் கத்தோலிக்கச் சபையினர் சொல்லுகிறபடி போப் என்பவன் சபைக்கு பகிரங்க தலைவராயிருக்கிறார், கிறிஸ்துவுக்கு பதிலாக, மெய்யான சபைக்கு எம்மாத்திரம் சந்தேகமில்லாத போதகன் என்பதனை நாங்கள் நிராகரிக்கிறோம் எபே 1:22-23, கொலே 1:18, லூக் 22:25,26. மத் 20:25-28, 1பேது 5:2-3, மத் 23:7-11.

2. ஈஸ்ட்ரன் ஆர்தோடெக்ஸ் சபை, எபிஸ்டிலியன்கள், மெதடிஸ்டுகள், இவான்ஜிலிக்கல் யுனிட்டட் பிரதர்கள், மோர்மோன்கள், இர்வங்கைட்ஸ்கள், முதலானவர்கள் சொல்லுகிறபடி சபையின் மீது அதிகாரம் செலுத்துவது என்பது கேவலம் போப்புக்கள், பிஷப்புகள் முதலான சபையின் தலைவர்களுக்கே கிறிஸ்துவின் மூலம் கொடுக்கப்பட்டது. சபையின் மீது சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் அதிகாரம் இல்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 2 கொரி 1:24, யாக் 4:12,அப் 6:6, அப் 15:22-23, அப் 21:22, 3 யோவான் 9.

3. ரோமன் கத்தோலிக்கச்சபை சொல்லுகிறபடி, ரோமன் கத்தோலிக்கச்சபை என்பது விசுவாசிகள் அனைவருக்கும் தாய் மற்றும் போதனை செய்பவள் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 கொரி 7:23, யோ 3:29-30, 1 பேது 5:2-3, மத் 23:7-11.

4. கிழக்கு கத்தோலிக்கச் சபை, இவான்ஜிலிக்கல் காங்கிரிகேவுனல் சபை, ரோமன் கத்தோலிக்கச் சபை, சால்வேஷன் ஆர்மி, மெதடிஸ்டுகள், இவான்ஜிலிக்கல் யுனிட்டட் பிரதர்கள், புதிய எருசலேம் சபை, முதலானவர்கள் சொல்லுகிறபடி தேவன் கட்டளையிட்ட கட்டளைகளைக் கூட நிர்ணயிப்பதற்கு சபைக்கு அதிகாரமிருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 2 தெச 2:3-4, 1 கொரி 7:23, யாக் 4:12, மத் 28:19-20, 1 பேது 5:2-3, கொலே 1:18, ஏசய் 8:19-20, கொலே 2:8, கலாத் 1:8, மத் 15:3-9, யோவா 2:6, உபாக 4:2.

5. ஈஸ்ட்டரன் ஆர்தோடெக்ஸ் சபை, இவான்ஜிலிக்கல் காங்கிரிகேஷனல், எபிஸ்க்கோபிலியன்கள், ரோமன் கத்தோலிக்கச்சபை, சால்வேஷன்

ஆர்மி, பிரஸ்பைடிரியன்கள், மெதடிஸ்டுகள், யுனிட்டட் பிரதர்கள், இன்கிரைஸ்ட், இவான்ஜினக்கல் யுனிட்டட் பிரதர்கள் முதலானவர்கள் சொல்லுகிறபடி சபை சட்டங்களை தேவனுடைய கட்டளையாக கண்டிப்பாக மற்றும் ஜாக்கிரதையாக கடைப்பிடிக்க வேண்டிருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 கொரி 7:35, ரோ 12:1, கொலே 2:16.

6. ரோமன் கத்தோலிக்கச் சபை சொல்லுகிறபடி, ஊழியர்கள் ஆகட்டும், விசுவாசிகளுக்காகட்டும் வார்த்தையின் உபதேசத்தின் மீது நிர்ணயம் எடுக்கிற அதிகாரம் இல்லையென்றும், அவர்களுக்கு சபை தேர்தலில் ஓட்டு போடுகிற உரிமை இல்லையென்றும் மற்றும் சபை அதிகாரத்தில், நிர்வாகத்தில் பங்குபெறுவதற்கு அவர்கள் அருகதையற்றவர்கள் என்றும் சொல்லுகிற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 கொரி 7:35, ரோ 14:12, அப் 17:11, அப் 21:22, அப் 15:22, மத் 7:15, 1 யோவா 4:1, 1 கொரி 10:15, 1கொரி 2:15.

## <u>25 சபை மற்றும் அரசாங்கம் பற்றின உபதேசம்.</u>

## <u>DOCTRINE OF CHURCH AND STATE</u>

(அ) சபை மற்றும் அரசாங்கம் என்ற இந்த இரண்டும் தேவனால் சட்டம் செய்யபட்ப்பட்டு ஒன்றோடு ஒன்று கலப்பதற்கு முடியாததாக இருக்கிறது. ஏனென்றால் இந்த இரண்டு பூர்த்தியாக வேறு வேறு நோக்கங்களை உடையதாய் வேறுப்பட்டு இருக்கிறது என்று நாங்கள் விசவாசிக்கிறோம்.

(ஆ) சபையினால் தேவன் மனுஷர்களை இரட்சிப்பதற்கு உத்தேசித்து இருக்கிறார் அதே மாதிரி அரசாங்கத்தின் மூலம் மனுஷர்களை பகிரங்க

ஒழுங்கு முறையில் வைப்பதற்கு உத்தேசித்து இருக்கிறார் என்று நாங்கள் விசுவாசகிக்கிறோம்.

(இ) சபைக்கு தேவன் நியமித்த பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சபை மற்றும் அரசாங்கம் என்பது சாதிக்க வேண்டிய காரியங்கள் வேறு வேறாயிருக்கிறது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

(ஈ) சபைக்கு தேவன் நியமித்த பிரகாரம் தேவனுடைய வார்த்தை போதிப்பதை தவிர மற்ற எந்த இதர காரியங்கள், வேலைகள் செய்யக் கூடாது மற்றும் சமூகப் பிரகாரமான அம்சங்கள் சபைகளில் வராமல் ஜாக்கிரதைபட வேண்டியிருக்கிறது. அதே மாதிரி அரசாங்கம் சமூகத்திலே ஜனங்கள் சரியான முறையில் ஜீவிப்பதற்கு முடிகிறபடி சட்டங்களை இயற்றி ஒழுங்குமுறை தப்பாமல் அவர்களை சரியான முறியல் சிட்சித்து தீர்ப்பு செய்வதற்கு தேவனால் நியமிக்கப்பட்டவர்கள் என்று நாங்கள் விசவாசிக்கிறோம். யோவா 18:11,36, ரோ 13:4.

## வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத கீழ்கண்ட உபதேசங்களை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1) ரோமன் கத்தோலிக்கச் சபை மற்றும் கல்வானிஸ்டு சபை சொல்லுகிறபடி அரசாங்கத்தின் மேல் அதிகாரம், சபையினுடைய நிர்ணயம், விருப்பத்தினால் நியமிக்கப்படலாம் மற்றும் அரசாங்கத்திற்கு சபை தேவனுடைய வார்த்தையின் மூலம் உதவி செய்துக் கொண்டிக்கிறதாயிருக்க வேண்டும் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ரோம 13:1-2, 1 தீமோ 2:1-3, 1 பேது 2: 13-15, மத் 17: 27 மத் 22: 21.

2) கியூக்கர் சர்கார், மென்னோனைட்ஸ்கள், சேக்கர்கள், டங்கார்ட்ஸ் முதலானவர்கள் சொல்லுகிறபடி கிறிஸ்தவர்கள் யாராயிருந்தாலும் கூட சமூக காரியக்கிரமங்களில் கலந்து கொள்ளுவார்கள் என்பதனை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத் 22:21, ரோ 13: 1-2.

3) சீர்த்திருத்த பிரஸ்பைரிடியன்கள் சொல்லுகிறபடி ஜனங்களை சிட்சிப்பதற்கு யுத்தங்களை அதிகாரப் பூர்வமாக அறிவிப்பதற்கு கிறிஸ்தவர்கள் இராணுவத்தைப் போல அரசாங்கத்திற்கு எம் மாத்திரமும் உதவியாயிருக்க கூடாது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். லூக் 3:14 மத் 8:5-7, அப் 10:28.4

6) மென்னோனைட்ஸ்கள், டங்கார்ட்ஸ்கள், கியூக்கர்கள் சொல்லுகிறபடி கிறிஸதவர்கள் எந்த நிலையிலும் பிரமானம் செய்யக் கூடாது மற்றும் பிரமாணம் செய்விக்கக் கூடாது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எபி 6:16, ஆதி 14:22இ23, யோ 14:9 2 சாமு 21:7, 2 கொரி 1:23 பிலி 1:8.

## 26 திருமணம் பற்றின உபதேசம்

## DOCTRINE OF THE MARRIAGE

(அ) திவ்யமான திருமண முறை என்பது ஒரே கணவன் மற்றும் ஒரே ஸ்தீரியை உடையவனாயிருந்து இல்லர வாழ்க்கையில் அவர்களிருவரும் ஐக்யமாயிருக்க வேண்டும் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ரோ 7:2 ஆதி 2: 24, மத் 19:4-6.

(ஆ) இந்த திருமண முறையின் மூலம் அவர்களுக்கு பிள்ளைகளை

உண்டாக்கி அவர்களுடைய சரீரபிரகாரமான அவசரங்களை தீர்த்துக் கொள்ளும்படியாக, மற்றும் அவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுத்து சமூகத்திலே ஒருவருக்கொருவர் உதவிச் செய்து கொண்டு அவர்களை வளர்த்து மனுஷர்கள் அனைவரிடத்திலும் பழக்கமாக கலந்து ஜீவிக்கும்படியாக, இந்த முறையை தேவன் ஏற்படுத்தினார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். ஆதி 24:58, ஆதி 12:8, எபே 5:33, 1 கொரி 7:2-5, ஆதி 2:22-24, சங் 128 :2-3.

(இ) திருமணம் இரத்துச் செய்வதற்கு ஒரே காரணம் இருக்க வேண்டும் அது விபச்சாரம் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். மத் 5:32, ரோம 7:2

(ஈ) கணவன் மனைவி இருவரில் ஒரு அமானுஷ்ய ஐக்யம் இன்னொருவரின் மூலம் கோரமாக இம்சிக்கப்பட்டாலும் அவர்களோடே இருக்க வேண்டும் என்ற போதனை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 கொரி 7:15

(உ) திருமணத்தில் பிரவேசிப்பதற்கு முன்பாக சம்மதம் கேட்க வேண்டியிருக்கிறது. காரணம் என்னவென்றால் சம்மதம் கேட்பதின் மூலம் தாய் தகப்பன் அனுமதி தெரிவித்து, திருமண சம்மந்தமான கட்டளைகளை நிறைவேற்றபடுகிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம் ஆதி 24:58, எபே 6: 2-3 1 கொரி9:5 லேவி 18:6, லேவி 20:11.

(ஊ) சபையின் ஊழியனாக இருப்பதற்காக விவாகம் அவனுக்கு தடை செய்யப்படக் கூடாது என்பதை நாங்கள் விசுவாசிக்கிறோம். 1 கொரி அ9:5

(எ) கிறிஸ்தவர்கள் திருமணத்திற்கு சரியான முறையிலும் மரியாதைப் பூர்வமான முறையிலும் நடத்துவதின் மூலம் அவர்களுடைய ஆத்துமத்திற்கு மற்றவர்களுடைய ஆத்துமத்திற்கு சௌபாக்கியம் உண்டாக்குகிறவராய் தேவனுடைய மகிமை விவாகத்தின் மூலம் பிரதிபலிக்கிறவராயிருக்கிறார் என்பதை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ரோம 13:13, எபே 5:3-4, பிலி 4:8

## <u>வேதாமத்தின் அடிப்படையில் இல்லாத கீழ்க்கண்ட உபதேசங்கள் நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.</u>

1) ரோமன் க்கதோலிக்கச் சபை சொல்லுகிறபடி திருமணம் என்பது கிறிஸ்துவின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு சாக்கிரமெந்து மற்றும் அது அவருடைய கிருபையை தெரியப்படுத்துகிறது. திருமணம் ஆகதாவராய் இருப்பது என்பது தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு பிரம்மச்சாரியாக இருப்பது தேவனுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். ஆதி 2:18 மத் 19:4, யோ 2:1-11, சங் 128, 1 தீமோ 5:14, (விவாகம் என்பது ஒரு சாக்கிரமெந்து அல்ல, பிரம்மச்சாரியாக இருந்து தேவனுடைய ஊழியராக மாறுவது என்பது போப்பினுடைய வலுக் கட்டாயமான செய்கை இதன் மூலம் போப் தனக்குத் தானே அந்திக் கிறிஸ்துவாக நிருபித்துக் கொள்கிறான்) மத் 19:10-12, 1 தீமோ 4:1-6.

2) மோர்மோன்கள் சொல்லுகிறபடி விவாகம் என்பது சமயத்தில் ஒரு பாகமாயிருக்கிறது மற்றும் விவாகம் செய்துக் கொள்ளாமல் இரட்சிப்பிலே பரிபூரணத்துவத்து யாரும் வரமுடியாது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 கொரி 7:7-9, 25, 40.

3) ஷேக்கர்கள் சொல்லுகிறபடி மனுரூபமாக்கப்பட்ட கிறிஸ்துவினுடைய பிள்ளையாக விசுவாசிகளானவர்கள் கண்டிப்பாக விவாகம் செய்து கொள்ளக் கூடாது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எபி 13:4, எபேசி 5: 3-5, 1 கொரி 6:9-10, 7:2, 9:5

4) ரோமன் கத்தோலிக்கச் சபை சொல்லுகிறபடி பாதிரியார்கள் விவாகம் செய்துக் கொள்ளக் கூடாது என்பதனை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். 1 தீமோ 3:2-4, எபி 13: 4, 1 தீமோ 2:3, 1 கொரி 9:5, மத் 4: 7.

5) மோர்மோன்கள் சொல்லுகிறபடி பலதார திருமணம் என்பதனை வேதாகமம் தடை செய்யவில்லை. ஆனால் இவற்றை செய்யலாம் என்று கட்டளையிடப்பட்டிருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

6) ரோமன் கத்தோலிக்கச் சபை சொல்லுகிறபடி ஆசாரிய பூர்வமான பிரதானங்களுக்கு தாய் தகப்பன்கள் அனுமதி அவசரம் இல்லை என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். யாத் 20:22, கொலே 3:20, யாத் 22:16-17, எண்ணர 30:4-6

7) ரோமன் கத்தோலிக்கச் சபை சொல்லுகிறபடி இரத்த சம்மந்தம் குறித்து மற்றும் சம்மதம் குறித்து இருக்கிற வேதாமத்தின் அடிப்படையில் இருக்கிற கட்டளையிலிருந்து விடுதலை செய்வதற்கு சபைக்கு அதிகாரம் இருக்கிறது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். யாக் 4:12, 1 கொரி 7:23, மத் 22:13, மத் 15:3-9, உபா 4:2, யோ 23:6.

8) ரோமன் கத்தோலிக்கச் சபை சொல்லுகிறபடி எவ்வளவு தீவிரமான

காரணமாயிருந்தாலும் விவாகரத்து என்பது கொடுக்க கூடாது மற்றும் ஒருவரோடு ஒருவர் கலந் திருக்கிற அந்த அமானுஷ்ய ஐக்கியத்திற்கு எவ்விதமான நிலைமையிலும் மறு விவாகம் செய்யக் கூடாது என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத் 5:32, 1 கொரி 7: 10-11, 15.

## <u>27 மரித்து அடக்கம் செய்யப்பட்ட பிறகு உயிர்த்தெழுதல் பற்றின உபதேசம்.</u>

## <u>DOCTRINE OF THE RESURRECTION OF THE DEAD</u>

(அ) கடைசி நாளில் மரித்துப் போனவர்கள் மறுபடியும் திரும்ப உயிரோடு எழும்புவார்கள், அவர்கள் ஆத்துமா இருக்கிற வண்ணமே திரும்ப அவர்கள் சரீரத்தை தரித்துக் கொள்வார்கள் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். தானி 12:2, யோபு 19:25-27, யோ 11:24-25

### <u>வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத கீழ்கண்ட எல்லா உபதேசங்களையும் நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.</u>

1) ரோமன் கத்தோலிக் சபை, கிரீக் கத்தோலிக் சபை சொல்லுகிறபடி யாருடைய பாவங்களுக்கு பிரயாசித்தம் செய்யப்படவில்லையோ அவர்கள் மரித்தப் பிறகு அவர்கள் ஆவி நித்ய ஜீவனில் பிரவேசிக்காமல் அவர்கள் பாவம் பரிசுத்தம் ஆகும் வரைக்கும் அவர்களுடைய மரண லோகத்திலேயே இருக்க வேண்டியிருக்கும். ஆனால் இந்த உலகத்தில் பிழைத்துக் இருக்கிறவர்கள் பிரார்த்தனைகளின் மூலம் அந்த மரித்துப் போனவர்களுடைய ஆத்துமா மரண உலகத்தில் தண்டிக்கப்பட்டு தப்பிக்கப்பட்டு நித்திய ஜீவனுக்குள் போய்ச் சேரமுடியும் என்ற

போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். லூக் 23:43, லூக் 16:22-23, யோ 3:36, யோ 5:24, பிலிப் 1:23, கலாத் 6:8-10, எபி 9:27.

## 28 நியாயத் தீர்ப்புக்குறித்த உபதேசம்

## DOCTRINE OF THE JUDGEMENT

(அ) கடைசி நாளில் கிறிஸ்து ஜீவனுள்ளோருக்கும், மரித்தோருக்கும் நியாயம் தீர்ப்பதற்கு வருவார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். அப் 1:11, அப் 17: 31, ரோம 14:10, மத் 25: 31-46.

(ஆ) யுக யுகாங்களாக கிறிஸ்துவனிடத்தில் விசுவாசம் வைத்தவர்களுக்கு அவர்தம் மகிமையிலே எடுத்துக் கொள்வார் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

(இ) அவரை தம்முடைய இரட்சகராக ஏற்றுக் கொள்ளாத எல்லாரையும் நித்ய சாபத்திற்கு, தண்டனைக்கு அனுப்புவர்ா என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

### வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத உபதேசங்களை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1. புதிய எருசேலம் சபை, சேக்கர்கள், யூனிட் டேரியன்கள், யூனிவர்ஸலிஸ்டுகள், கிறிஸ்தவ விஞ்ஞானிகள், மாடர்னிஸ்டுகள் சொல்லுகிறபடி உயிரோடிருப்பவர்களுக்கு, மரித்தவர்களுக்கு நியாயம் தீர்ப்பதற்கு கிறிஸ்து இந்த உலகத்திற்கு திரும்ப வரமாட்டார் என்று சொல்லுகிற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம் 1 தெச 5:1-3, மத் 25: 31-46

2) ஏழாம் நாளை அனுசரிப்போர் சொல்லுகிறபடி கிறிஸ்து நியாய பீடத்தின் முன்பு எல்லாரும் நியாயத் தீர்ப்பிற்காக வரவேண்டிய அவசரமில்லை என்ன போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். மத் 24:36, லூக் 21 : 34-36 மாற் 13 :32, 2 பேது 3:10.

## 29 நித்ய ஜீவன் மற்றும் நித்ய அழிவு பற்றின உபதேசம்.

## DOCTRINE OF THE ETERNAL LIFE END ETERNAL DAMNATION.

(அ) ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் நித்திய ஜீவனை சுதந்தரித்து கொள்வார்கள், நித்ய ஜீவனுக்கு போவார்கள் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். 1 தெச 4:16-17, வெளி 2: 10 யோவா 14:2,

(ஆ) அதே மாதிரி அநியாயக்காரர்கள், அக்கிரமக்காரர்கள் அனைவரும் நித்ய நரகத்திற்கு போவார்கள் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். 2 பேது1:7 -10 மத் 25:35-46 வேதாகமத்தின் அடிப்படையில் இல்லாத கீழ்கண்ட உபதேசங்களை நாங்கள் ஏற்க மறுக்கிறோம்.

1) யூனிட்டேரியன்கள், மாடர்னிஸ்டுகள் லாட்ஜரி முதலானவர்கள் சொல்லுகிறபடி மனுஷரெல்லாரும் பரலோகத்தில் நித்ய இரட்சிப்பை நிலையாக பெற்றுக் கொள்வார்கள் என்பதனை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். எபி 4:3-9, மாற் 16 :16, யோ 3:18, 36.

2) யூனிவர்ஸலிஷ்டுகள், யூனிட்டேரியன்கள், சேக்கர்கள்,மோர்மோன்கள், ஆவியை ஆராதிப்பவர்கள், மாடர்னிஸ்டுகள், ஏழாம் நாளை ஆசரிப்போர், அட்வண்ட்டிஸ்டுகள், சொல்லுகிறபடி கெட்டவர்கள் நித்ய நரகத்தில்

தண்டனையை அனுபவிக்க மாட்டார்கள் என்பதனை நாம் ஏற்க மறுக்கிறோம். 2 தெச 2:7 - 10, ஏச 16:24, தானி 12:2, மத் 25-41, மத்.; 5:26

3) ஏழாம் நாளை ஆசரிப்போர், அட்வண்ட்டிஸ்டுகள் சொல்லுகிறபடி கெட்டவர்கள், துன்மார்க்கர்கள், பூர்த்தியாக நிர்மூலம் செய்யப்படுவார்கள் என்ற போதனையை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். வெளி 14:11, வெளி 21:8, மத் 25:41, மாற் 9:43-48.

**ஆமென்.**